
Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 265 ஆவணி 05 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 21 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



**முச்சந்தி முரளி**

'ஏற்கனவே ரண்டரைக் கட்சிகள் தான். இப்ப இந்த முடிவால கூட்டமைப்புக்கு இனி ஏழரை தொடங்கிட்டு போல'

# கூட்டமைப்புக்குள் பிளவு! புளொட், ரெலோ தனிவழி

## நாடாளுமன்றில் தனித்து இயங்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 21

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் எதேச்சதிகாரமான தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் நாடாளுமன்றத்தில் தனித்துச் செயற்படுவதற்கு புளொட் மற்றும் ரெலோ கட்சிகள் தீர்மானித்துள்ளன. இது தொடர்பில் சபாநாயகரை இன்று அல்லது நாளை இரு கட்சிகளின் தலைவர்களும் நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். 15 >

## இடைக்கால கணக்கறிக்கை; இரு நாள்கள் விவாதம்

கொழும்பு, ஓக.21

அரச செலவுகள் உள்ளடங்கிய இடைக்கால கணக்கறிக்கை மீது எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெறவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த 15 >

## சபையில் சில சுவைகள்..

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாடாளுமன்றுக்கு வரும் நிகழ்வு, அவருடைய அறிவுறுத்தலில் அடிப்படையில் மிகச் சாதாரணமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய மரியாதை வேட்டுக்கள் தீர்த்தல், வாகன அணிவகுப்பு போன்றன இம்முறை நடைபெறவில்லை.



நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கோட்டை நகர சபையின் முன்னாள் முதல்வர் மதுர விதானகே நாடாளுமன்ற அமர்வுக்குப் படகில் வந்திருந்தார். ஜனாதிபதியின் எண்ணக் கருவுக்கு அமைய தியவன்ன ஓயா அபிவிருத்தி செய்யப்பட்டமையால் நாடாளுமன்றத்துக்கு படகில் வரமுடிந்தது என்று அவர் தெரிவித்தார்.



9ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு நேற்று நடந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தூங்கி வழிந்தனர் என்று சமூக வலைத் தளங்களில் படங்களுடன் பதிவுகள் நேற்று வைரலாகின. நாடாளுமன்ற உறுப்பினர்களான நிமல் சிறிபால டி சில்வா, வினோ நோகராதலிங்கம் ஆகியோரின் படங்கள் சமூக வலைத் தளங்களில் பகிரப்பட்டிருந்தன.





தயாசிறி ஜயசேகர தனது அமைச்சின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில், பத்திக் உடை அணிந்து நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டார். பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடைகள் உற்பத்திகள் இராஜாங்க அமைச்சர் பொறுப்பு தயாசிறி ஜயசேகரவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு உரையாற்றக் குறைந்தளவு நேரமே ஒதுக்கப்பட்டுள்ளது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். 60:40 என்ற அடிப்படையில் 60 வீதம் எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட வேண்டும். இங்கு 60 வீதத்தை ஆளுங்கட்சி எடுத்துக் கொண்டுள்ளார்கள் என்று மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

## மயிலிட்டியில் கிரெனெட்டுகள் மீட்பு



யாழ்ப்பாணம், ஓக.21

வலி.வடக்கு மயிலிட்டிப் பிரதேசத்தில் வெற்றுக் காணி ஒன்றில் இருந்து ஒரு தொகை கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

காணி ஒன்றுக்குள் வெடிபொருள்களை அவதானித்த மக்கள், அது தொடர்பில் கிராம அலுவலருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். கிராம அலுவலர் இது தொடர்பில் பலாலிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். பலாலிப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் 15 >

## 19ஆவது திருத்தம் 'அவுட்' புதிய அரசமைப்பு உறுதி

### நாடாளுமன்றத்தில் கோத்தா திட்டவட்டம்



கொழும்பு, ஓக.21

அரசமைப்பில் மாற்றத்தைச் செய்வதற்காக நாம் கோரிய மக்கள் ஆணை எமக்கு கிடைத்துள் ளதால் எமது முதலாவது பணியாக நாம் மக்களுக்கு உறுதியளித்தவாறு, 19ஆவது அரசமைப்பு திருத்தத்தை நீக்க நடவடிக்கை எடுப்போம். அனைவருடனும் இணைந்து 15 >

## மானிப்பாயில் சிக்கிய 'ஹெல்மெட்' திருடன்

யாழ்ப்பாணம், ஓக.21

மானிப்பாய் பகுதியில் கடந்த 2 மாதங்களுக்கு மேலாகத் தொடர்ச்சியாக தலைக்கவசத் திருட்டில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என மானிப்பாய் பொலிஸார் 15 >

## 16 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஓக்.21

கொரோனாத் தொற்றுக்குள்ளான 16 பேர் நாட்டில் இனங்காணப்பட்டுள்ள நிலையில், இதுவரை 2 ஆயிரத்து 918 பேர் நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

தமிழ்நாடு, சென்னை 15 >

## மணியின் முடிவு இன்று தெரியும்!

யாழ்ப்பாணம், ஓக.21

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ள சட்டத்தரணி வி.மணிவண்ணன் தனது நிலைப்பாட்டை இன்று அறிவிக்கவுள்ளார்.

கட்சியின் மத்திய குழுவால் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கான தனது விளங்கங்களை நேற்று அவர் கட்சியின் 15 >

## இன்றுடன் மின்வெட்டு இல்லை!

கொழும்பு, ஓக.21

இன்று வெள்ளிக்கிழமையின் பின்னர் நாளாந்தம் மின்வெட்டு நடைமுறை படுத்தப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கெரவலப்பிட்டி உப மின்னுற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட 15 >

## வீதியைக் கடந்தவரை மோதித்தள்ளியது பஸ்

### கொடிகாமம் விபத்தில் ஒருவர் படுகாயம்

கொடிகாமம், ஓக.21

பாதசாரிகள் கடவை ஊடாக வீதியைக் கடந்தவர் மீது தனியார் பயணிகள் பேருந்து மோதியதில் அவர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று இரவு 7.15 மணியளவில் 15 >

## வீட்டில் ஒளித்துவைத்த 50 கிலோ கஞ்சா மீட்பு!

### கணவர் தப்பியோட்டம் வீட்டிலிருந்த மனைவி கைது

கிளிநொச்சி, ஓக. 21

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முரசுமோட்டையில் 50 கிலோ எடையுடைய கஞ்சா பொதி நேற்றுக் கைப்பற்றப் 15 >

# நாடாளுமன்றத்தில் இரு பதவிகள் சு.கவின் வசம்

## சபாநாயகராக மஹிந்த யாப்பா தெரிவு
## தமிழ் பிரமுகர்களும் வாழ்த்து மழை

**கொழும்பு, ஒகஸ்ட் 21**
**இலங்கையின் 9ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர் நேற்று நடைபெற்றது. முற்பகல் 9.30 மணிக்கு சபை கூடியபோது முதலில் ஜனாதிபதியின் பிரகடனம் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தால் வாசிக்கப்பட்டது.**

அதன்பின்னர் சபாநாயகரை தெரிவுசெய்யும் நடவடிக்கை இடம்பெற்றது. 9 ஆவது நாடாளுமன்றத்தின் சபாநாயகர் பதவிக்கு மஹிந்த யாப்பா அபேவர்தனவின் பெயரை முன்மொழிவதாக சபை முதல்வர் தினேஷ் குணவர்தன, நாடாளுமன்ற செயலரிடம் அறிவித்தார்.

தினேஷின் முன்மொழிவை ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலர் ரஞ்சித் மத்தும பண்டார வழிமொழிந்தார். சபாநாயகர் பதவிக்கு வேறு நபர்களின் பெயர் முன்வைக்கப்படாததால் மஹிந்த யாப்பா அபேவர்தன ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

அதன் பின்னர் பெயரை முன்மொழிந்த தினேஷ் குணவர்தனவும், வழிமொழிந்த ரஞ்சித் மத்தும பண்டாரவும் புதிய சபாநாயகரை சபாபீடத்துக்கு அழைத்துச்சென்றனர். உறுதியுரை ஏற்ற பின்னர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபாநாயகர் கதிரையில் அமர்ந்தார்.

இரண்டாம் கட்ட நடவடிக்கையாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்தனர். இந்த நிகழ்வு முடிவடைந்த பின்னர் கட்சி தலைவர்கள் புதிய சபாநாயகருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

அரசின் சார்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவும், பிரதான எதிர்க்கட்சி சார்பில் சஜித் பிரேமதாசவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தனும் வாழ்த்துகளைத் தெரிவித்தனர். இதனை பதவியாகக் கருதாது பொறுப்பாக உணர்ந்து செயற்படுமாறு தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டினார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், புளொட் தலைவர் சித்தார்த்தன், ஈ.பி.டிபியின் பொதுச்செயலர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன், இ.தொ.காவின் பொதுச்செயலர் ஜீவன் தொண்டமான் ஆகிய தமிழ்த் தலைவர்களும் புதிய சபாநாயகருக்கு வாழ்த்து தெரிவித்து குறுகிய உரையாற்றினர். இறுதியில் சபாநாயகர் நன்றியுரை ஆற்றினார்.

அதன்பின்னர் பிரதி சபாநாயகர் தேர்வு இடம்பெற்றது. இப்பதவிக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் ரஞ்சித் சிலம்பலாபிட்டியவின் பெயரை அக்கட்சி உறுப்பினர் அமைச்சர் மஹிந்த அமரவீர முன்மொழிந்தார். அப்பெயரை இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா வழிமொழிந்தார்.

அடுத்ததாக குழுக்களின் பிரதி தவிசாளர் பதவிக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பெயர் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவால் முன்மொழியப்பட்டு, இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவால் வழிமொழியப்பட்டது. இப்பதவிகளுக்கும் போட்டி இன்மையால் இவரும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர். அதே வேளை, 9 ஆவது நாடாளுமன்றத்தின் சபை முதல்வராக தினேஷ் குணவர்தன வும், ஆளுங்கட்சி கொற்றடாவாக ஜொன்ஸ்டன் பெர்ணான்டோவும் சபாநாயகராக ஏற்றுக்கொள்ளப்பட்டனர். எதிர்க்கட்சித் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

(ஒ.5,44)

# ஆளில்லா வீட்டில் நகைகள் திருட்டு!

யாழ்ப்பாணம், ஓக. 21
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தொல்புரம் பகுதியில் ஆள்கள் இல்லாத வீட்டுக்குள் புகுந்து சுமார் மூன்றே கால் பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொல்புரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வீட்டில் இருந்தவர்கள் வெளியில் சென்ற சமயம் வீட்டின் ஓடுபிரித்து இறங்கிய திருடர்கள் மேற்படி நகைகளைக் கொள்ளையிட்டுள்ளனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-20)

## வவுனியாவில்
# பல்வேறுபட்ட திருட்டுக்களுடன் தொடர்புடைய இருவர் கைது

வவுனியா, ஓக. 21
வவுனியாவில் பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இந்து திருடப்பட்ட பொருள்களும், ஆடுகளும் மீட்கப்பட்டன.

சமயபுரம் பகுதியில் நெல் அரைக்கும் ஆலை ஒன்றில் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான நான்கு மோட்டர்களைத் திருடிய குற்றச்சாட்டு மற்றும் காத்தார்சின்னக்குளம், ஆச்சிபுரம் பகுதிகளில் ஆடுகளை திருடிய குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களே கைது செய்யப்பட்டனர்.

(ம-110)

# பொற்கிழி கொடுக்க காத்திருக்கும் மனோ

யாழ்ப்பாணம், ஓக.21
தன்னை நையாண்டி செய்து சமூக வலைத்தளத்தில் காணொலி ஒன்றைப் பதிவிட்டவருக்கு பொற்கிழி கொடுக்கக் காத்திருப்பதாகப் பதிவிட்டுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன்.

உரையாடும்போது, அதிக கையசைவுகளை மேற்கொள்வது நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனின் பாணி. அதை கிண்டலடித்து, ஒரே நாளில் நடனம் பயில்வது எப்படி எனத் திரைப்படம் ஒன்றில் வந்த காட்சியையும் இணைந்துக் காணொலி ஒன்று சமூக வலைத் தளங்களில் பதிவேற்றப்பட்டுள்ளது.

இந்தக் காணொலியைத் தனது முகநூல் கணக்கில் பகிர்ந்துள்ள மனோ, "நையாண்டி, கேலி, கிண்டல் அடங்கிய நகைச் சுவை உணர்வு எனக்கு ரொம்ப பிடிக்கும். என் வாழ்வு சக்கரம் சீராக ஓட உதவும் "கிறீஸ்" அது தான். இந்தக் காணொலியின் படைப்பாளியைத் தேடுகின்றேன், பொற்கிழி கொடுக்க..!" என்று பதிவிட்டுள்ளார்.

பொதுவாழ்வில் "அட்வடைஸ்மென்ட்" தான் உண்டு. "நெகற்றிவ் அட்வடைஸ்மென்ட்" என்று எதுவும் இல்லை. அரசியலில் பால பாடம் என்றும் அவர் பதிவிட்டுள்ளார்.

(எ)

# மாடு திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 21
மாடு திருடிய குற்றச்சாட்டில் மானிப்பாய் பொலிஸாரால் நேற்றுக் காலை ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வாகனத்தில் மாடு கொண்டு சென்றவரை, சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணை செய்தபோது அந்த மாடு கோப்பாய்பகுதியில் திருடப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது. அதையடுத்துச் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார். மாட்டின் பெறுமதி சுமார் 80 ஆயிரம் ரூபா என்பது தெரியவந்துள்ளது என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், விசாரணையின் பின்னர் அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர.

(எ-26)

# முள்ளியவளையில் கஞ்சாவுடன் பெண் உள்ளிட்ட இருவர் கைது

முல்லைத்தீவு, ஓக. 21
முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வற்றாப்பளைப் பகுதியில் கஞ்சாவை உடமையில் வைத்திருந்த குற்றத்துக்காக இளைஞன் ஒருவரும், யுவதி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வற்றாப்பளை வீதியில் மேற்படி இருவரும் கஞ்சாவுடன் பயணிக்கின்றனர் என்று பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்களின் உடைமையில் இருந்த கஞ்சா மீட்கப்பட்டுள்ள துடன் சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-19)

# கொழும்புத்துறையில் நேற்று வாள்வெட்டு!

யாழ்ப்பாணம், ஓக. 21
யாழ்ப்பாணம் கொழும்புத்துறைப் பகுதியில் ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய கும்பலொன்று அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது. தாக்குதலுக்கு உள்ளானவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நெடுங்குளம் கொழும்புதுறையைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் மீதே இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் கொண்ட குழு தாக்குதலை நடத்தியது. மோட்டார் சைக்கிளில் பயணித்தவரை வழிமறித்து வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியதுடன் அவர் பயணித்த மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்திவிட்டு அந்தக் குழு அங்கிருந்து தப்பித்தது.

பழைய பகையைத் தீர்க்கும் வகையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப விசாரணைகளின் பின் பொலிஸார் தெரிவித்தனர். மேற்படி தாக்குதலை நடத்தினார் என்ற சந்தேகத்தில் நாவாந்து றையைச் சேர்ந்த 24 வயதுடைய நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

(ம-20,25)



# ஒரு லட்சம் வேலைவாய்ப்பு வடக்கு மற்றும் கிழக்கில் இல்லை

**கொழும்பு, ஓக. 21**

**நாடளாவிய ரீதியில் ஒரு இலட்சம் பேருக்கு அரச வேலை வாய்ப்பை வழங்கும் திட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இப்போதைக்கு கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படமாட்டா என்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.**

க.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி கற்றவர்களில் இருந்து நாடு முழுவதும் ஒரு இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கவுள்ளதாக அரசு அறிவித்தது.

எனினும் தற்போது வடக்கு, கிழக்கில் மட்டும் அதனை நிறுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பு வழங்குவதை இடைநிறுத்துவதற்கான உத்தரவு வடக்கு கிழக்கின் 8 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டச் செயலகங்களுக்கும் நேற்று மாலை தொலை நகல் மற்றும் மின் அஞ்சல்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், குறித்த நியமனத்தில் யாழ்ப்பாணத்தில் 6 ஆயிரத்து 626 பேரும் கிளிநொச்சியில் 2 ஆயிரத்து 261 பேரும் மன்னாரில் ஆயிரத்து 830 பேரும் முல்லைத்தீவில் ஆயிரத்து 565 பேரும் நியமிக்கப்படவிருந்ததோடு, வவுனியாவில் ஆயிரத்து 258 பேரும் நியமிக்கப்படவிருந்தனர்.

இவர்களுக்கு எதிர்வரும் 31ஆம் திகதி முதல் நியமனம் வழங்கப்படும் எனவும் மாவட்டச் செயலகங்களுக்கு உறுதியளிக்கப்பட்டது. இந்த நிலையிலையே அதனை இடைநிறுத்துமாறு அவசர உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் ஜனாதிபதி கோத்தபாயவின் பணிப்புரைக்கு அமைய குறைந்த வருமானம் பெறும் ஒரு இலட்சம் பேருக்கும் தொழில்வாய்ப்பு இன்றி காணப்படும் 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கும் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு அமைய 50 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்பு பெற்றவர்களின் பெயர் விவரங்கள் அரச சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்தன. மேலும் ஒரு இலட்சம் பேருக்கான வேலை வாய்ப்பு தெரிவுக்கு நாடளாவிய ரீதியில் வறிய குடும்பத்திலிருந்து தெரிவு செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## சடலம் மீட்பு

வவுனியா, ஓக. 21

வவுனியா பறயனாலங்குளம் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் வீதித் தடைக்கு அருகிலுள்ள சிறிய கொட்டிலில் இனம் தெரியாத நபரின் சடலம் நேற்றுக் காலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. சடலத்தை வவுனியா மருத்துவமனையில் பொலிஸார் ஒப்படைத்தனர்.

எந்தவித ஆவணங்களும் இல்லாத நிலையில் சடலம் மீட்கப்பட்டது. அதனால் சடலமாக மீட்கப்பட்டவரை அடையாளம் காண முடிய வில்லை என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ஒ,5,110)

## 902 குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கலாம்

### கோத்தாவுக்கு பரிந்துரை

கொழும்பு, ஓக. 21

மன்னிப்பு வழங்குவதற்கு தகுதியுடையவர்களின் பெயர்ப் பட்டியல் ஜனாதிபதி கோத்தாபயவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சிறு குற்றங்களை இழைத்த 902 பேருக்கு, ஜனாதிபதியின் அனுமதியுடன் பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது. நாட்டை அச்சுறுத்திவரும் கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்தல் மற்றும் சிறைச்சாலைகளில் நிலவும் நெருக்கடியைக் குறைக்கும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது. ஜனாதிபதி சட்டத்தரணி காலிங்க இந்திரதிஸ்ஸ தலைமையில், கைதிகள் மற்றும் அவர்களின் விடுதலை குறித்து ஆராய்ந்து பார்ப்பதற்காக அண்மையில் ஜனாதிபதியால் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவாலேயே பொது மன்னிப்பு வழங்குவதற்கு தகுதியுடையவர்களின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, முன்னதாக, 20 ஆண்டுகளுக்கு மேல் சிறைவாசம் அனுபவித்த 60 வயதுக்கும் மேற்பட்ட கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என்று சிறைச்சாலைகள் திணைக்களம், அண்மையில் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## மாதகலில் காணி சுவீகரிப்பு முயற்சி மக்களின் எதிர்ப்பையடுத்து நிறுத்தம்



யாழ்ப்பாணம், ஓக. 21

மாதகலிலுள்ள கடற்படை முகாமுக்கு தனியார் காணிகளை சுவீகரிக்க நில அளவைத் திணைக்களத்தினர் நேற்று வியாழக்கிழமை வருகை தந்த போது அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியை நில அளவைத் திணைக்களத்தினர் அளப்பதற்கு வருகை தந்திருந்தனர். இதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். நில அளவைப் பணியை கைவிட்டு விட்டு திரும்பிச் சென்றனர். சிறிது நேரம் அப் பகுதியில் பதற்றமான நிலைமை காணப்பட்டது. மக்களின் போராட்டத்தின் போது ஏராளமான பொலிஸாரும் கடற்படையினரும் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர். (ஒ,5,20)

## வட்டி வீதத்தில் மாற்றங்கள் மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு, ஓக. 21

தங்கக்கடன் அடைவு, கடனட்டை என்பவற்றுக்கான வட்டி வீதத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபை அறிவித்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபை நேற்றுமுன்தினம் கூடியபோது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி கடனட்டைகளுக்கான அதிகபட்ச வட்டியை 18 வீதமாக குறைப்பதற்கும், தங்கக்கடன் அடைவு வட்டியை 10 வீதமாக குறைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வங்கி மேலதிக பற்றுக்கான வட்டி 16 வீதமாக குறைக்கப்பட்டுள்ளதுடன், தற்போதைய கொள்கை வட்டி வீதத்தை மாற்றமின்றி பேணுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, நிலையான வைப்புக்கான வட்டி 4.5 வீதமாகவும் நிலையான சலுகை கடன் வட்டி வீதம் 5.5 வீதமாகவும் காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## முதல் கூட்டத்திலேயே ஆளுங்கட்சி ஆதிக்கம்

### *சம்பிரதாயத்தை மீறிவிட்டதாக எதிரணி காட்டம்*

கொழும்பு, ஓக. 21

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் 'கொள்கை விளக்க உரை மீது நாடாளுமன்றத்தில் இன்று முழு நாள் விவாதம் நடைபெறுகிறது. நாடாளுமன்றம் நேற்று காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடவுள்ளது. பிரதான சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் விவாதம் ஆரம்பமாகி மாலை 4.30 மணிவரை நடைபெறும். அதேவேளை, நாடாளுமன்றத்தை பிரதிநிதித்து வப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகளுக்கான கூட்டம் சபாநாயகர் தலைமையில் நேற்று சபாநாயகர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரைமீது இரு நாள்கள் விவாதம் வேண்டும் என எதிரணிகள் கோரின. எனினும், ஒரு நாள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆளுங்கட்சியால் முன்வைக்கப்படும் யோசனை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது வழமையாக எதிரணிக்கு 60 வீதமும் ஆளுங்கட்சிக்கு 40 வீதமும் நேரம் ஒதுக்கப்படும்.

ஆனால், ஆளுங்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் காரணம் காட்டி இந்த நடைமுறையை அரசு மாற்றியுள்ளது எனவும், ஆளுங்கட்சிக்கு 60, எதிரணிக்கு 40 என தவறான முடிவு முதல் கூட்டத்திலேயே எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

ஆளுங்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை காரணம்காட்டி சம்பிரதாயத்தை மீறமுடியாது. 1977 இல் ஜே.ஆர். ஆட்சியின்போது ஆறில் ஐந்து பெரும்பான்மை இருந்தபோதும் எதிரணிக்கு 60 வீத நேர ஒதுக்கீடு வழங்கப்பட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஒ,5,44)

## 222 பேர் நேற்று சத்தியப்பிரமாணம்

கொழும்பு, ஓக. 21

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு நேற்று இடம்பெற்றது. இதன்போது 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில், பிரதம அமைச்சர் மஹிந்த ராஜபக்ச உட்பட்ட 222 பேர் இன்று சத்தியப்பிரமாணம் செய்தனர். தேசியப்பட்டியல் சர்ச்சையால் எமது மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள் சபை அமர்வில் பங்கேற்கவில்லை. தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சபை அமர்வில் பங்கேற்கவில்லை. (ஒ,5,44)

# மிருசுவிலில் குடியமர்ந்தோரில் வீடு கிடைக்காதோர் வாருங்கள்

## மக்களின் குற்றச்சாட்டடை அடுத்து தென்மராட்சி பிரதேச செயலகம் அறிவிப்பு

**தென்மராட்சி, ஓக. 21**
**வன்னிப் பகுதியிலிருந்து தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் குடியமர்ந்து 9 வருடங்கள் ஆகின்றன. எனினும், அங்குள்ள 25 குடும்பங்களுக்கும் இதுவரை வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை என்று அந்தக் குடும்பங்கள் கூறுகின்றன. எனினும், அவ்வாறு வீட்டுத் திட்டம் கிடைக்காதவர்கள் பிரதேச செயலகத்துக்கு வாருங்கள் என்று தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர்**

வன்னியிலிருந்து 2011ஆம் ஆண்டு மிருசுவில் தவசி குளம் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள 25 குடும்பங்களுக்கு இதுவரை வீட்டுத்திட்டம் வழங்கப்பட வில்லை என்று தமது பகுதிக்கு வரும் வீடமைப்புத் திட்டங்கள் மிருசுவில் பகுதியில் முன்னர் தொடக்கம் வசித்த குடும்பங்களுக்கே வீட்டுத் திட்டம் வழங்கப்படுகின்றது என்றும் 25 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் சுற்றறிக்கைப்படி வீடமைப்புத் திட்டத்தில் இந்தியா மற்றும் வன்னிப்பகுதியிலிருந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளபோதும் தாங்கள் ஓரங்கட்டப்பட்டு வருகின்றோம் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக தென்மராட்சி பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோதே பிரதேச செயலகத்துக்கு வருமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

வீடமைப்புத் திட்டத்துக்கு பயனாளிகளைத் தெரிவு செய்யும்போது வன்னிப் பகுதியிலிருந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கும் முன்னுரிமை உள்ளது. வீட்டுத் திட்டத்துக்கு பயனாளிகளைத் தெரிவு செய்யும் பணிகள் பிரிவில் கடமையாற்றும் கிராம அலுவலர் மற்றும் அபிவிருத்தி அலுவலர் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. திட்டத்துக்கு புள்ளிகள் அடிப்படையில் பயனாளிகள் தெரிவு இடம்பெறுகின்றது. தமக்கு வீட்டுத் திட்டம் கிடைக்கவில்லை என்று குற்றஞ்சாட்டும் குடும்பங்கள் ஏன் தெரிவு செய்யப்படவில்லை என்பது தெரியாமல் உள்ளது. அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இது வரை பிரதேச செயலகத்தில் முறையிட்டதாகவும் தெரியவில்லை. அவ்வாறு வீட்டுத் திட்டம் கிடைக்காதவர்கள் தமது குடும்ப அட்டையுடன் பிரதேச செயலகத்துக்கு வருமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்று தெரிவித்தனர். (கு-9)

## தேர்தல் விதிமுறையை மீறிய 6 பேருக்கு நீதிமன்று பிணை

மன்னார், ஓக. 21
கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது கட்சி ஒன்றின் பரப்புரை நடவடிக்கைக்காக தேர்தல் விதிமுறைகளை மீறிச் செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைதான 6 பேருக்கு மன்னார் நீதிவான் மன்று பிணை வழங்கியுள்ளது.

மன்னார் நகருக்குள் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டம் ஒன்றுக்கு ஆதரவு தெரிவித்து, மோட்டார் சைக்கிளில் அதன் ஒலியை தொடர்ச்சியாக ஒலித்தவண்ணம் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் அந்த ஆறு பேரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதில் மன்னார் நகரசபை உறுப்பினர் ஒருவரும் உள்ளடங்குகிறார் என்று தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட ஆறு பேரும் கடந்த திங்கட்கிழமை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இவர்களுக்கு எதிரான குற்றப்பத்திரிகையை பொலிஸார் மன்றில் தாக்கல் செய்யாமையால் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை வழக்கை ஒத்தி வைத்த நீதிவான் சந்தேக நபர்கள் ஆறு பேரையும் தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல உத்தரவிட்டார். (ஐ-60)

## யாழ்ப்பாண மாவட்ட காணி இணக்க சபை அமர்வு நாளை முதல்

யாழ்ப்பாணம், ஓக.21
யாழ்ப்பாண மாவட்ட காணி இணக்க சபை அமர்வுகள் மீண்டும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

நாளை 22 ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாள்களில் காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் அமர்வுகள் நடைபெறவுள்ளன.

கொவிட் 19 காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த போது தொடர்பிலிருந்த பிணக்குகளுடன் தொடர்புபட்டவர்கள் (இருசாராரும்) அன்றைய தினம் வருகை தந்து பிணக்கு விடயத்தைத் தொடரலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-50)

## திருட்டு குற்றச்சாட்டில் கூமாங்குளம் வாசி கைது

வவுனியா, ஓக.21
திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

வவுனியா வைரவபுளியங்குளம் சந்தியில் அமைந்துள்ள வியாபார நிலையங்களுக்குள் கடந்த 16 ஆம் திகதி உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்து பணத்தையும் பொருள்களையும் திருடிச்சென்றிருந்தனர்.

சம்பவம் தொடர்பாக வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவந்தனர். இந் நிலையில் கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-110)

## கலங்கரை மலருக்கு ஆக்கங்கள் கோரல்

காரைநகர், ஓக.21
காரைநகர் பிரதேச செயலகத்தால் கலை, இலக்கியம், வரலாறு, தொல்லியல் மற்றும் பண்பாடு ஆகியவற்றை ஆவணப்படுத்துகின்ற வகையில் வருடாந்தம் வெளியிடப்படும் கலங்கரை பிரதேச மலரானது இவ்வாண்டும் வெளியிடப்படவுள்ளது.

இம்மலரில் பிரசுரிப்பதற்கு காரைநகர் பிரதேச கலை, இலக்கியம், வரலாறு, தொல்லியல், பண்பாடு ஆகிய விடயங்களுடன், காரைநகரில் வாழ்ந்த அல்லது வாழ்கின்ற ஆளுமைகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், சமூக சேவகர்கள் தொடர்பான ஆக்கங்கள் எழுத்தாளர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

குறித்த ஆக்கங்களை செப்டெம்பர் மாத இறுதிக்குள் கிடைக்கக்கூடியதாகக் காரைநகர் பிரதேச செயலகத்துக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஐ)

## வீதியில் நின்ற மூதாட்டியின் தங்கச் சங்கிலி அறுப்பு

சாவகச்சேரி, ஓக. 21
பஸ்ஸுக்காக வீதியோரத்தில் காத்திருந்த மூதாட்டியின் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இரு கொள்ளையர்கள் அபகரித்து சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி கச்சாய் வீதி தம்பு தோட்ட படைமுகாமுக்கு அருகில் இடம்பெற்றது.

பஸ்ஸுக்காக காத்திருந்த மூதாட்டியிடம் அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அப்பகுதியில் உள்ள ஒருவரின் வீடு எங்குள்ளது எனக்கேட்டுள்ளனர். மூதாட்டி ஒருபக்கம் திரும்பி கையைக் காட்டியபோது கழுத்தில் காணப்பட்ட ஒன்றரைப் பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர்.

மூதாட்டி உதவி கோரியபோதிலும் அப்பகுதியில் குடியிருப்புகள் இல்லாததால் சங்கிலியை அபகரித்தவர்கள் சம்பவ இடத்துக்கு முன்பாக உள்ள வீதியூடாக தப்பியோடியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9)

## தனிமைப்படுத்தப்பட்ட 67 பேர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21
சவூதி அரேபியாவில் இருந்து இலங்கை திரும்பிய நிலையில் விடத்தற்பளை தனிமைப்படுத்தல் முகாமில் தங்கவைக்கப்பட்ட 67 பேர் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

கொரோனா தொற்றுக் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித்தவித்த இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் செயற்பாடுகள் அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் சவூதி அரேபியாவில் இருந்து அழைத்துவரப்பட்ட இவர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்ததையடுத்து சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். (ஐ-159)

## பொதுக்கூட்டமும் உறுப்பினர் தெரிவும்

மன்னார், ஓக.21
மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், ஆளுநர் சபை உறுப்பினர் தெரிவும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி காலை 9 மணிக்கு கலையருவி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதிய ஆளுநர் சபையில் உறுப்பினர்களாக இணைய விரும்புவோர் மூன்று மாதங்களுக்கு முன் உறுப்புரிமை பெற்றவர்கள் இத் தேர்தலில் போட்டியிட முடியும்.

இதற்கான வேட்பாளர் விண்ணப்பப் படிவத்தை இதன் அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-60)

## விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஓக.21
பேருந்துக்காக வீதியோரத்தில் நின்ற யுவதியை வேகக் கட்டுப்பாட்டை இழந்து வந்த மோட்டார் சைக்கிள் மோதியது. இதன் போது இருவர் காயமடைந்தனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் மட்டுவில் பகுதியில் இடம்பெற்றது.

காயமடைந்த மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த 23 வயது யுவதியும், சித்தன்கேணியைச் சேர்ந்த 19 வயது இளைஞனும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அழிய விடுவதற்கு ஆரம்பமா?

கடந்த சில நாள்களுக்கு முன்னர் நாடாளாவிய ரீதியில் இடம்பெற்ற மின்வெட்டு இலங்கையில் இருக்கக்கூடிய பல்வேறு பலவீனங்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது. அவற்றில் ஒன்றுதான் வடக்கு மாகாண சுதேச மருத்துவத்துறை மீதான கனதியான குற்றச்சாட்டு.

இலங்கையெங்கும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டதை அடுத்து வடமாகாணத்தில் பல்வேறு சுதேச மருத்துவமனைகள் தமது விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவந்த நோயாளர்களை விடுதி நீக்கம் செய்து வீட்டுக்கு அனுப்பியிருந்தன. நேரகாலம் மனிதாபிமானம் என்பவற்றை ஏறெடுத்தும் பார்க்காது மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைக்கு மின்வெட்டு காரணமாகச் சொல்லப்பட்டது. அதாவது மின்சாரம் இல்லாத காரணத்தால் நோயாளர்களை விடுதிகளில் தங்கவைப்பதை விட அவர்கள் வீடுகளுக்கே அனுப்புவது சிறந்தது என்று இந்த முடிவு எடுக்கப்பட்டது எனச் சொல்லப்பட்டது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் ஒன்றான இலங்கை, சுதேச மருத்துவத்துறையில் எவ்வளவுதூரம் பின்னால் நிற்கின்றது என்பதற்கும் சுதேச மருத்துவத்துறையை எவ்வளவுதூரம் அசட்டை செய்கின்றது என்பதற்கும் ஆகப் பிந்தியதும் பெரியதுமான எடுத்துக்காட்டாக இது அமைந்தது.

இன்று ஆங்கில மருத்துவம் உலகெங்கும் ஊடுருவி வியாபித்து இருந்தாலும் சுதேச மருத்துவத்தின் மீதான நம்பிக்கை – பற்றுறுதி உள்ளவர்கள் எம்மத்தியில் ஏராளமானவர்கள் உள்ளனர். பக்க விளைவுகளை ஏற்படுத்தாது, உடனடி நிவாரணம் தரக்கூடியது என்பதன் அடிப்படையில் எம்மவர்கள் பலர் சுதேச மருத்துவத்தின் மீது அதீத நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கின்றனர். மேற்கூறிய காரணங்களால் சுதேச மருத்துவத்துறையை வளப்படுத்த – மேம்படுத்த வேண்டும் என்ற குரல்களும் எம்மத்தியில் அவ்வப்போது ஒலிக்கத்தான் செய்கின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் அவை அனைத்தும் மாறிமாறி ஆட்சிப்பீடம் ஏறும் இந்த அரசுகளால் தொடர்ந்தும் நிராகரிக்கப்படுகின்றன என்பதே கசப்பான உண்மை.

இன்று பல்வேறு கால்நடை மருத்துவமனைகள்கூட நவீன மயப்படுத்தப்பட்டுவிட்டன. மாற்றுமின் வசதி, குளிரூட்டப்பட்ட அறைகள் என்று அதன் கட்டமைப்பு வருடாவருடம் கணிச வளர்ச்சியடைந்து வருகின்றது. ஆனால், எம்மவர்களின் பழைமையான துறை தன் இருப்பை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அடிப்படைக் கட்டமைப்புக்களில் ஒன்றான மின் கட்டமைப்பே சுதேச மருத்துவமனைகள் பலவற்றில் இல்லையென்பது சுதேச மருத்துவத்துறை இங்கு அழிவின் விளிம்பில் நிற்கின்றது என்பதைத்தான் கட்டியம் சொல்கின்றதே தவிர வேறொன்றும் இல்லை.

சுதேச மருத்துவத்துக்கு என்று இலங்கையில் அமைச்சொன்று உள்ளது. அதற்கென்று ஒதுக்கீடுகள் உள்ளன. இவ்வாறிருக்கையில் இந்த அமைச்சால் கடந்த காலத்தில் ஆற்றப்பட்டுள்ள பணிதான் என்ன? அந்த அமைச்சுக்காக ஒதுக்கப்படும் நிதி எங்கு செல்கின்றது? எவ்வாறு செலவிடப்படுகின்றது? என்ற கேள்விகள் இன்று மக்கள் மனங்களை வியாபித்துள்ளன.

சுதேச மருத்துவமனைகள் புத்துயிர்ப்பு பெற வேண்டும். அதற்கான ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டு இயற்கை மருத்துவம் ஊக்கப்படுத்த வேண்டும். சுதேச மருத்துவத் துறைக்கான கட்டமைப்புக்கள் பலப்படுத்தப்பட வேண்டும். இவை தொடர்பில் இருக்கக்கூடிய குறைபாடுகள் அனைத்தும் விரைந்து தீர்க்கப்படல் வேண்டும். இதுவே அனைவரதும் எதிர்பார்ப்புமாகும்.

# அதிக விலையில் உரம் விற்பனை

### விவசாயிகள் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21

**உரத்தை விற்பனை செய்யும் தனியார் நிறுவனங்கள் அவற்றை கமநல சேவைகள் நிலையத்தின் ஊடாக வழங்குவதற்கு இணங்கிக் கொண்ட அளவு உரத்தை விவசாயிகளுக்கு வழங்கவில்லை. அதே வேளை, தனியார் விற்பனை நிலையங்கள் உரத்தை நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்கின்றார்கள்.**

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.


யாழ்ப்பாண மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதன்போதே மேற் கண்டவாறு விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டது.

உருளைக் கிழங்கு உற்பத்திச் செய்கையில் ஈடுபடுவதற்கு மானியம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை விவசாயிகளால் முன்வைக்கப்பட்டது. அத்துடன் விவசாய முயற்சிகளுக்காக விவசாயிகளிடமிருந்து மாதம் 600 ரூபா வீதம் மின்சாரக் கட்டணம் அறவிப்படுகின்றது. அறவிடப்படும் தொகையில் குறைப்பு மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இதேவேளை, அதிகரித்த விலையில் உரம் விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டினர். உரங்களை விற்பனை செய்யும் தனியார் நிறுவனங்கள், 50 சதவீதத்தை கமநல சேவை நிலையங்கள் ஊடாக வழங்க வேண்டும் என்று வரையறை உள்ளபோதும் அதனைப் பின்பற்றாமல், தனியார் வர்த்தக நிலையங்கள் ஊடாக அதிக விலைக்கு விற்பதாக சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது சேதனப் பசளையை விட, அசேதனப் பசளை அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் சேதனைப் பசளையை உற்பத்தி செய்வதற்கு காரைநகர் மற்றும் வேலணை பிரதேச செயலர் பிரிவுகளில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கள் ஊடாக உற்பத்தி நிலையங்கள் உருவாக்கிக் கொடுக்கப்பட்டபோதும், வேலணை பிரதேச செயலர் பிரிவில் அவை இயங்கவில்லை என்று சுட்டிக்கா ட்டப்பட்டது. (ஒ.5)



## அல்லிப்பளையில் தண்ணீரில் மாற்றம்

### நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஓக. 21

கிளிநொச்சி அல்லிப்பளை கிராமத்தில் வசிக்கும் மக்கள் தாம் தண்ணீருக்காகப் போராடும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். கிராமத்தில் உள்ள கிணறுகளில் காணப்படும் தண்ணீரில் நிறமாற்றம் மற்றும் எண்ணெய்த் தன்மை காணப்படுவதாக என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராமமே அல்லிப்பளை. குறித்த கிராமம் கடற்கரையை அண்மித்துள்ளது. ஆனால் தற்போது கிணறுகள் அனைத்திலும் மேற் குறிப்பிட்ட அறிகுறிகள் காணப்படுகின்றன. சேறு நிறைந்துள்ளமையே அதற்குக் காரணமென எண்ணி சேற்றை அகற்றிய பின்னரும் அதே அறிகுறிகள் காணப்படுகின்றன என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

பிரதேச சபை குடிதண்ணீர் வழங்கிவருகின்றது. ஆனால் குளிப்பதற்கும், ஆடைகள் தோய்ப்பதற்கும் ஏனைய தேவைகளுக்காகவும் தண்ணீர் பெற மிக நீண்ட தூரம்செல்ல வேண்டியுள்ளது.

பாடசாலை செல்லும் மாணவர்களின் ஆடைகளை இந்தத் தண்ணீரில் தோய்த்தால், அவை சில நாள்களில் பாவிக்க முடியாதவாறு மாற்றம் அடைகின்றன. முன்னைய காலங்களில் இவ்வாறான நிலை காணப்படவில்லை. சில வேளைகளில் உவர்ப்புத் தன்மை காணப்படும், என்று அவர்கள் கூறுகின்றனர்.

கடற்கரையோர மணல் அகழ்வு தொடர்வதால்தான், தண்ணீரில் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்று அங்குள்ளவர்கள் சந்தேகிக்கின்றனர். இந்த நிலைமை பற்றி உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (து-6)

## நெல் உலர்த்துவதற்கு புதிய தொழில்நுட்பம்

### கிளிநொச்சியில் பார்வையிடலாம்

நெல் உலர்த்தும் புதிய தொழில்நுட்பம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. கட்டுமானம் கிளிநொச்சி பொருளாதார மத்திய நிலையத்தில் உள்ள நெல் சந்தைப்படுத்தும் பகுதியில் இது அமைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் கடந்த 17ஆம் திகதி நடைபெற்றது. அதில், நெல் சந்தைப்படுத்தும் சபையின் அலுவலர் புதிய தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்தினார். இந்தப் பொறிமுறையை சகலருமே பார்வையிடலாம் என்றும் அவர் தெரிவித்தார். அதாவது 20' × 6' × 5' அளவுப் பிரமாணமுடைய தொட்டியில் (சிமெந்து), 2ஆயிரத்து 500 கிலோகிராம் நெல்லைத் தினம்தோறும் உலர்த்தலாம். மிகக் குறைந்த மனிதவலு, மிகக் குறுகிய இடப்பயன்பாடு மற்றும் சூரிய ஒளி என்பவை இதற்கு மிக அவசியமாகும். மழைக்கும் பாதுகாப்பான இந்தப் பொறிமுறையில் ஒரே நாளில் நெல் 14 வீதம் உலரும் தன்மையைக் கொண்டுள்ளது. இதன் கட்டுமானத்துக்கான செலவு 75 ஆயிரம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, அன்றைய தினம் விவசாயிகளுக்கான புதிய நெல் இனம் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. பிரதி விவசாய பணிப்பாளர் விதைகள் உற்பத்தி பகுதியால் இது அறிமுகம் செய்யப்பட்டது.

சிறந்த விதை நெல் உற்பத்தியாளர்களுக்கு விதை நெல் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. நெல் இனத்தின் பெயர் 'பி.டபிள்யு 312' சிவப்பு. இது 3 மாதங்கள் வயதுடைய கட்டை இனம் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-222)

முகமாலையில்

## நூலகம் அமைக்கும் பணிகள் முன்னெடுப்பு

கிளிநொச்சி, ஓக.21
நாட்டில் இடம்பெற்ற யுத்த காலப்பகுதியில் இலங்கை இராணுவத்தினதும் விடுதலைப் புலிகளினதும் முன்னரங்கப் பகுதியாக காணப்பட்ட முகமாலைப் பகுதியில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் நூலகம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கபட்டுள்ளன.
மக்களின் தொடர்ச்சியான வேண்டுகோளை ஏற்று 60 லட்சம் ரூபா சபை நிதி மூலம் இந்த வேலைத்திட்டம் இடம்பெறுகின்றது. நூலகம் மற்றும் உப அலுவலகம் என்பன இந்த நிதி மூலம் முகமாலை பகுதியில் அமைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்தப் பணிகளை பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தலைவர் சுப்பிரமணியம் சுரேன் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளார். (ரி2-6)

## முன்பள்ளிகளை அடுத்த மாதம் திறக்க முடிவு

**சாவகச்சேரி, ஓக.21**
**சிறார்களுக்கான சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பட்சத்தில் தென்மராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட முன்பள்ளிகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி திறக்கலாம் என முடிவுசெய்யப்பட்டுள்ளது.**

முன்பள்ளிகளை மீளத்திறப்பது தொடர்பாக பிரதேச செயலர் திருமதி உ.சுபலிங்கம் தலைமையில் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் இம் முடிவு எட்டப்பட்டுள்ளது. கலந்துரையாடலில் சுகாதாரப் பகுதியினர், தென்மராட்சி கல்வி வலயத்தினர், உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். முன்பள்ளிகளில் சிறார்கள் கைகழுவும் வசதிகள் மற்றும் சமூக இடைவெளிகளைமேற்கொள்ளக் கூடிய வகையில் சிறார்களுக்கு இட வசதிகள் போன்றவற்றைக் மேற் கொள்ளவேண்டும். முன்பள்ளிகளின் விபரங்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு வழங்கப்பட்டு, அவர்கள் முன்பள்ளி களைப் பார்வையிட்டு முன்பள்ளிகளை மீள இயக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என அறிக்கையிடும் பட்சத்தில் செப்ரெம்பர் 2ஆம் திகதி திறக்க அனுமதிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.
கொரோனாத் தொற்று ஏற்பட்டதால் கடந்த மார்ச் மாதம் தொடக்கம் முன்பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக முன்பள்ளி மூடப்பட்டுள்ளதால் சிறார்களின் அடிப்படைக் கல்வி பாதிக்கப்படுகின்றது எனப் பெற்றோர் முறையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி1-9)

தேசிய விளையாட்டு ஆலோசனை


### குழுவில் சங்கக்கார, ஜயவர்தன



கொழும்பு, ஓக.21
இலங்கை கிரிக்கெட் வீரர்களான குமார் சங்கக்கார மற்றும் மஹேல ஜயவர்தன ஆகியோரை தேசிய விளையாட்டு ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களாக இணைய விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார். தேசிய விளையாட்டு ஆலோசனைக் குழுவின் புதிய உறுப்பினர்கள் விரைவில் பெயரிடப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து விளையாட்டு அமைச்சின் அதிகாரி ஒருவர் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் கருத்து தெரிவித்ததாவது:
முன்னாள் கிரிக்கெட் வீரர்களான குமார் சங்கக்கார மற்றும் மஹேல ஜயவர்தன ஆகிய இருவரும் 1973 ஆம் ஆண்டின் விளையாட்டுச் சட்டத்தின் கீழ் இரண்டு ஆண்டுகளுக்கு நியமிக்கப்படுவார்கள். நாட்டில் விளையாட்டுக்களை வளர்ச்சியை நோக்கி கொண்டு செல்வது தொடர்பான விடயங்களில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதே அவர்களின் முக்கிய பணியாக இருக்கும் என்றார். இதேவேளை, சங்கக்கார மற்றும் ஜயவர்தன தவிர, இலங்கையில் விளையாட்டுகளை மேம்படுத்துவதில் தொடர்ச்சியாக உறுதியளித்துள்ள வல்லுநர்கள் பலர் இந்தக் குழுவில் இருப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)

### முன்னாள் போராளி சாவு

முல்லைத்தீவு, ஓக. 21
முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த முன்னாள் போராளி ஒருவர் ஐரோப்பிய நாட்டுக்குச் செல்வதற்காக இலங்கையிலிருந்து வெளியேறி பங்களாதேஷில் தங்கியிருந்த வேளை மாரடைப்பால் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சுடர் அல்லது குமரன் என்று அழைக்கப்படும் 44 வயதுடைய முன்னாள் போராளியான இவர் ஒரு காலை இழந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5,19)



வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை உறுப்பினர் திருமதி அஞ்சலா கோகிலகுமாரின் 2020 க்கான வருடாந்த நிதி ஒதுக்கீட்டில், ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டம், பாலமோட்டை, கிழவிகுளம் உட்பட 15 கிராமங்களிலுள்ள வீதிகளுக்கு 60 மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. (ரி3)

### குழுநிலை போட்டிகள் ஆரம்பம்

சாவகச்சேரி, ஓக.21
தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தென்மராட்சி பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான இவ் வருட விளையாட்டுப் போட்டிகளின் குழு நிலைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.
இந்தப் போட்டிகள் மீசாலை சீமா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. கரப்பந்து மற்றும் கயிறு இழுத்தல் போட்டிகளே இங்கு இடம்பெறவுள்ளன. எதிர்வரும் 23 ஆம் திகதி கைதடி சரஸ்வதி விளையாட்டு மைதானத்தில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டம், ஆண்,பெண் பிரிவினருக்கான எல்லே மற்றும் பெண்களுக்கான கிரிக்கெட் போட்டிகளும் நடைபெறவுள்ளன. (ரி2-9)

### முல்லை சிறுகைத்தொழில் பிரிவால் முகப்புத்தக பக்கம் அறிமுகம்

முல்லைத்தீவு, ஓக.21
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தொழில் முனைவோரின் சந்தை வாய்ப்புக்களை மேம்படுத்துவத்துவதற்காக முல்லைத்தீவு மாவட்ட சிறு கைத்தொழில் பிரிவால் முகப்புத்தக பக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
https://www.facebook.com/sedd.mullaitivu.1 எனும் இப் பக்கத்தின் ஊடாக மாவட்டத்திலுள்ள தொழில் முனைவோரின் உற்பத்திகளைச் சந்தைப்படுத்த முடிவதுடன் நுகர்வோரும் இலகுவில் உற்பத்தியாளரைத் தொடர்பு கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

## கூட்டிலுள்ள விலங்குகளை பார்ப்பது காலாவதியான முறை

சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக.21
தெஹிவளை மிருகக்காட்சிசாலையை பிலியந்தலை கஹபொல பகுதிக்கு மாற்றுவதற்கான திட்டம் தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.
கூண்டுகளில் அடைக்கப்பட்டுள்ள விலங்குகளைப் பார்ப்பது ஒரு காலாவதியான முறைமையாகும். ஆகையினால் மிருகக்காட்சி சாலையை நவீன உலகத்திற்கு ஏற்றவாறு மாற்ற வேண்டியது அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார் சுற்றுலாத்துறை அமைச்சகத்தில் விலங்கியல் மற்றும் தாவரவியல் பூங்கா அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் பிரசன்ன ரணதுங்க இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.
தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் விலங்குகளுக்கு உணவு மற்றும் பிற தேவைகளை வழங்க மாதத்திற்கு சுமார் 4 கோடி ரூபா செலவிடப்படுகிறது எனவும் யானைகளைக் கட்டுப்படுத்த வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்பட்டு, அவற்றை ஊர்வலங்களில் பயன்படுத்த கொடுக்கப்படவுள்ளன எனவும் அமைச்சர் கூறியுள்ளார். இந்த வழிகாட்டுதல்கள் விரைவில் அமைச்சரவையில் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (ரி)

# வவுனியாவில் தொடர்கிறது யானைகளின் அட்டகாசம்!

வவுனியா, ஓக.21

**வவுனியா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் காட்டுயானைகளின் அட்டகாசத்தால் பொதுமக்கள் மற்றும் தோட்டச் செய்கையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**



குறிப்பாக செட்டிகுளம், நீலியா மோட்டை, கனகராயன்குளம், புளியங்குளம், நெடுங்கேணி, காஞ்சூரமோட்டை, மெனிக்பாம் போன்ற பகுதிகளில் யானைகளின் அட்டகாசம் மிகவும் அதிகரித்த நிலையில் காணப்படுகிறது.

இதனால் விவசாய, தோட்டச் செய்கையாளர்கள் வெகுவாகப் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். ஒவ்வொரு இரவும் வருகைதரும் யானைக்கூட்டங்கள், பயன்தரும் பயிர்களை நாசம் செய்கின்றமையுடன், இருப்பிடங்களையும் சேதப்படுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதிகளின் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

யானைகளின் தொல்லைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணுமாறு பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை முன்வைத்து வருகின்ற நிலையில் அவர்களுக்கான தீர்வு இதுவரை வழங்கப்படவில்லை. இதேவேளை மாவட்டத்தின் பிரதான வீதிகளில் பகல் நேரங்களில் வந்து நிற்கும் யானைகளால் பயணிகளும் அசௌகரியங்களுக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, புளியங்குளம் நெடுங்கேணி பிரதான வீதி, மதவாச்சி மன்னார் வீதி, பூவசரங்குளம் செட்டிகுளம் வீதிகளில் மாலைவேளைகளில் யானைகளின் பிரசன்னம் அண்மைய நாள்களாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனால் அவ்வீதி வழியாகப் போக்குவரத்துச் செய்கின்ற பயணிகள், வாகனச் சாரதிகள் எனப் பலரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றமையுடன். அச்சத்துடனேயே பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ-110)

## சாரதிகள் 6 பேருக்கு 1,77,500 ரூபா தண்டம்

சாவகச்சேரி, ஓக.21

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய ஆறு பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றால் ஒரு லட்சத்து 77 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

மதுபோதையில் வாகனம் செலுத்திய நால்வருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட்சம் ரூபாவும், சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிப் பத்திரம் ஆகியவை இன்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 50 ஆயிரம் ரூபாவும், காப்புறுதிப் பத்திரம் மற்றும் வாகன வரிப்பத்திரம் ஆகியவை இன்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 27 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## கஞ்சாவுடன் கைதானவருக்கு ரூ.6,000 தண்டம்

மன்னார், ஓக.21

70 கிராம் கேரளக் கஞ்சாவை தன் வசம் வைத்திருந்த நபருக்கு மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் 6,000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சிலாபத்துறை பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-60)

## சமூக பாதுகாப்பு சபையால் புலமைப் பரிசில் வழங்கல்



யாழ்ப்பாணம், ஓக.21

நிதி அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற, இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் மாணவர்களுக்கு, புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

அதற்கமைவாக 2019 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த, 160 மாணவர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

அத்துடன் சனச அபிவிருத்தி வங்கியால் மாணவர்களுக்கு பரிசில் பொதிகளும் வழங்கப்பட்டன.

தற்போதைய கோவிட் 19 அனர்த்த சூழ்நிலை காரணமாக, வழமையாக மாவட்டச் செயலகத்தில் நடைபெற்று வந்த நிகழ்வு, இந்த வருடம் பிரதேச செயலகங்களின் ஊடாக நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் புலமைப்பரிசில் கொடுப்பனவில் உயர்ந்த தொகையாக 50 ஆயிரம் ரூபா உ. டுசாரா (இளவாலை அருணோதயா கல்லூரி மற்றும் வை. சகீனா, பா. கபிசனா(யா. வேம்படி மகளிர் கல்லூரி) ஆகிய மூன்று மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன.

மாவட்டச் செயலர் க. மகேசன் தலைமையில், மேலதிக செயலர் ம. பிரதீபன், இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் வடக்கு கிழக்கு சிரேஷ்ட இணைப்பதிகாரி பா. பிரதீபன், சனச அபிவிருத்தி வங்கி உத்தியோகத்தர் ம. ஜெனகன் மற்றும் பெற்றோர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் 50 ஆயிரம் ரூபா காசோலை, பரிசில் பொதிகள், சான்றிதழ்கள் மற்றும் சனச அபிவிருத்தி வங்கியின் 8 ஆயிரம் பெறுமதியான காசோலை என்பன வழங்கப்பட்டன. (க)

## சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட 11 வட்டாரங்களுக்கு 150 வீதி விளக்குகள்

சாவகச்சேரி, ஓக.21

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட 11 வட்டாரங்களுக்கு மேலும் 150 வீதி மின்விளக்குகள் பொருத்தப்படவுள்ளன. இதற்கான தீர்மானம் கடந்த சபை அமர்வில் நிறைவேற்றப்பட்டது.

சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதி விளக்குகள் பொருத்துவதற்கு, சபையின் உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டது.

வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்துவதற்கான அனுமதி கோரி, ஜூன் மாதம் நடைபெற்ற அமர்வில், சபையின் தவிசாளரால் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த உறுப்பினர்கள், சபையால் கடந்த காலங்களில் கூறுவிலைகள் மூலம் கொள்வனவு செய்யப்பட்டு, பொருத்தப்பட்ட வீதி விளக்குகள் மிகக் குறுகிய காலப்பகுதியில் பழுதடைந்துள்ளன. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை இதேவேளை எதிர்நோக்கியுள்ளனர். இதனால் கொள்வனவு செய்யப்படும் வீதி விளக்குகள் தரமானதாக, உத்தரவாதம் உள்ளனவா? என நாங்கள் பார்வையிட்ட பின்னரே கொள்வனவு செய்ய வேண்டுமெனத் தெரிவித்தனர். இதனையடுத்து கடந்த மாத (ஜூலை) அமர்வில் மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட்டன. ஏற்றுக் கொள்ளப்பட்ட வீதி விளக்குகளைப் பொருத்துவதெனவும், சபையின் பதினொரு வட்டாரத்துக்கும் சமமாகப் பிரிக்கப்பட்டு, தலா 13 வீதி விளக்குகள் பொருத்துவதெனவும் சபையில் தீர்மானிக்கப்பட்டது என்று தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார். (க-9)

## சொற்பொழிவு

நீர்வேலி, ஓக. 21

யாழ்ப்பாணம் கோப்பாய் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தால் வாராந்தம் சிறப்புச் சொற்பொழிவு நடத்தப்பட்டு வருகிறது.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஆலய சண்முக விலாச மண்டபம் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவை சிவநெறிச்செம்மல் இளம்சைவப்புலவர் ச. நவநீதன் "ஆறுபடையும் ஆறுபகையும்" என்னும் தலைப்பில் ஆற்றவுள்ளார். (ஐ)

## வாழைக்குலை திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21

வாழைப்பழத்தின் விலை அதிகரிப்பை பயன்படுத்தி வாழைக்குலை திருட்டு சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, ஊரெழு போன்ற இடங்களில் உள்ள தோட்டங்களில் வாழைக்குலை திருட்டு சம்பவங்கள் தாராளமாக இடம்பெற்று வருகின்றன.

திருடர்கள் இரவு நேரங்களில் தோட்டங்களில் காணப்படும் வாழைக் குலைகளை தந்திரமாக களவாடிச் செல்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

திருடர்களின் இந்த திருட்டுச் சம்பவங்களை முறியடிப்பதற்காக வாழைச் செய்கையாளர்கள் தமது தோட்டங்களில் காவல் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றமையையும் காணக்கூடியதாகவுள்ளது.

தற்போது கதலி வாழைப்பழம் கிலோ 160 ரூபா முதல் 180 ரூபா வரை விற்கப்படுகின்றது. (ஐ-17)

## இணக்கசபை அமர்வுகள்

சாவகச்சேரி, ஓக. 21

சாவகச்சேரி பிரதேச இணக்க சபை அமர்வுகள் அடுத்த வாரம் தொடக்கம் வழமை போல சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும் என்று சபைத் தவிசாளர் வை. இராசரத்தினம் அறிவித்துள்ளார்.

ஓகஸ்ட் மாதத்துக்குரிய அமர்வுகள் நாளை சனிக்கிழமை, நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை, எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை, 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாள்களில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

✦ ✦ ✦

பூநகரி. ஓக. 21

பூநகரி இணக்க சபை அமர்வுகள் நாளை சனிக்கிழமை, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமைகளில் பூநகரி மத்திய கல்லூரியில் நடைபெறுமென சபைத் தவிசாளர் எஸ்.யசோதரன் அறிவித்துள்ளார்.

கொரோனா அச்சம் காரணமாக சபையின் அமர்வுகள் சில மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. நீதி அமைச்சின் அறிவித்தலின் பிரகாரம் சபையின் அமர்வுகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-9)

# 13ஐ பலவீனப்படுத்த இடமளிக்கமாட்டேன்!

## கன்னி அமர்வில் பிள்ளையான் திட்டவட்டம்

கொழும்பு, ஓக. 21

கிழக்கு மாகாண சபையில் என்னுடைய தலைமையில் ஆட்சியைப் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ கொண்டுவந்திருந்தபோது அதற்குத் துணை கொடுத்து தோள் கொடுத்து மக்கள் மீது நம்பிக்கையைக் கட்டியெழுப்பி அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முடிந்தளவு காப்பாற்றியிருக்கின்றேன். அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஊடாக மாகாண சபையை மேலும் பலப்படுத்த வேண்டும். அதற்காக அரசுக்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்குவேன். இவ்வாறு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

9ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்குச் சபையில் வாழ்த்துத் தெரிவித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த நல்லாட்சி அரசானது என்னைத் திட்டமிட்டு சிறைப்படுத்தியிருக்கின்றது. ஐந்து வருடங்கள் நான் சிறைவாசம் அனுபவித்து வருகின்றேன். இந்த நிலையில், மட்டக்களப்பு மாவட்ட மக்கள் என்னைத் தங்களுக்குச் சேவை செய்வதற்காக நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

இந்த நாடாளுமன்ற அமர்வில் வந்து நான் கலந்துகொள்வதற்குப் பல தடங்கல்களும் தாமதங்களும் இருக்கின்றன. ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்தில் அனுமதி கோர வேண்டும். இப்படியான சூழலில் என்னால் மக்களுக்குச் சேவையாற்ற முடியாது.

எங்களுடைய நாட்டில் சமூக முரண்பாடுகள் நடந்து முடிந்திருக்கின்றன. நான் இந்த சமூக முரண்பாடு, ஆயுத பேராட்டங்கள் காரணமாக 16 வயதிலே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து போராடியவன். ஆனால், அந்த அமைப்பின் நோக்கங்கள், கொள்கைகள் பிழைத்ததன் காரணமாக அதிலிருந்து விலகி ஜனநாயக ரீதியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியை ஆரம்பித்து இன்று பல விடயங்களைச் செய்திருக்கின்றேன்.

இந்தநிலையில் இப்போது வட பகுதி மக்களும் தென்பகுதி மக்களும் இணைந்து பலமான ஓர் அரசை அமைத்திருக்கின்றார்கள். இந்த அரசுக்குத் தொடர்ந்தும் நான் ஒத்துழைப்பு வழங்குவேன்- என்றார்.

(ஒ,5,22,44)

# சிங்கள மேலாதிக்கத்தை தமிழர்கள் ஏற்கமாட்டார்கள்

## கன்னியுரையில் விக்கி முழக்கம்

யாழ்ப்பாணம், ஓக. 21

சிங்கள மேலாதிக்க அதிகாரத்தை தமிழ் மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

9ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகிய பின்னர் புதிய சபாநாயகராக தெரிவு செய்யப்பட்ட மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு வாழ்த்து தெரிவித்து உரையாற்றிய போதே விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

உலகில் உயிர்வாழும் மூத்த மொழிகளில் ஒன்றும் இந்த நாட்டின் முதல் சுதேச குடிமக்களின் மொழியுமாகிய எனது தாய் மொழியிலும் ஆரம்பித்து பின்னர் எல்லா மக்களையும் இணைக்கும் மொழியிலும் எனது வாழ்த்தைக் கூறுகின்றேன். எமது நாடாளுமன்ற பாரம்பரியத்தின் மிக உயர் பதவியை ஏற்றுக் கொண்டுள்ளமைக்காக உங்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

எமக்கு இப்பொழுது மிகவும் பலமான ஓர் அரசு அமைந்துள்ளது. 1977 ஆம் ஆண்டு இதேமாதிரியான ஒரு அரசு ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் கீழ் இருந்தது. அந்த ஆட்சியின் போதே 1983ஆம் ஆண்டு கலவரம் இடம்பெற்றது. அந்த காலத்து யானையாக இருந்து இன்று தனி ஓர் உறுப்பினராக குறுகிப் போயுள்ள பாதையை இந்த அரசும் நிச்சயமாக எதிர்காலத்தில் தொடரக்கூடும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யமாட்டார்கள் என்று நம்புகிறேன். கடந்த காலத்தில் நாம் விட்ட பிழைகளில் இருந்து பாடம் படித்து எல்லா சமூகங்களும் ஒருவருக்கு ஒருவர் மதிப்புடனும் சமனாகவும் உணருகின்ற வகையிலும் இலங்கை தாய் நாட்டின் பிள்ளைகள் நாம் என்ற இறைமையுடனும் பெருமையுடனும் நடைபோடும் வகையிலுமான சமாதானமும் செழிப்பும் மிக்க ஒரு காலத்தை ஏற்படுத்துவார்கள் என்றும் நம்புகிறேன்.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையுடன் ம்ரபு, பாரம்பரிய உரிமைகளின் அடிப்படையில் தேசம் என்று அங்கீகரிக்கப்படுவதன் பிரகாரம் சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடைய வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் உள்ளார்ந்த உரிமைகளை அங்கீகரிப்பதுடன் கடந்த காலம் பற்றிய தவறான வரலாற்று கண்ணோட்டங்களை களைந்தால் மட்டுமே சுதந்திரமும் சமத்துவமும் உதயமாக முடியும்.

பௌத்த மதத்தை பின்பற்றும் ஒரு நாட்டிலே, மேலாதிக்க அதிகார பிரயோகத்தை நாங்கள் எவரிடம் இருந்தும் எதிர்பார்க்க வேண்டியதில்லை. ஏனென்றால், சிங்கள கிராமத்தவர்கள், ஒவ்வொரு வினைக்கும் எதிர் வினை இருக்கும் என்பதற்காக பின்வரும் பழமொழியை கூறுவார்கள் என்பது எமக்கு தெரியும். அதாவது, (கல கல தே பல பல வே) முற்பகல் செய்த வினை பிற்பகல் விளையும் என்பதே அது, என்றார். (ஒ,5)

# அனைத்து இனத்தவரையும் திருப்தி செய்யக்கூடிய அரசமைப்பு தேவை

## கன்னி அமர்வில் ரிஷாத் எம்.பி வலியுறுத்து

கொழும்பு, ஓக.21

புதிய அரசமைப்பு மாற்றம் அனைத்து இனங்களையும் திருப்திப்படுத்தக்கூடிய வகையிலும், நாட்டின் நலனுக்கு ஏற்புடையதாகவும் அமைய வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

9 ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு,நேற்றுக் காலை இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அமைச்சரவையின் கன்னி அமர்வில், தற்போதைய அரசமைப்பில் மாற்றத்தைக் கொண்டுவர முடிவெடுத்து, அதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. காலத்துக்குக் காலம் அதிகாரத்துக்கு வருகின்ற அரசாங்கங்கள், அரசமைப்பில் மாற்றங்களைச் செய்துள்ளன. அதேபோன்று, இனிவரும் காலங்களிலும் பதவிக்கு வரும் அரசாங்கங்களும் இன்னொரு மாற்றத்தை மேற்கொள்ளாத வகையில், இந்த அரசமைப்பில் சீர்திருத்தம் செய்ய வேண்டும். உத்தேச அரசமைப்பு வெறுமனே, ஒரு சாராரையோ, ஒரு கட்சியையோ, ஒருசில இனவாதிகளையோ திருப்திப்படுத்துவதற்கு என்றில்லாமல், நாட்டில் வாழும் அனைத்துச் சமூகங்களையும் குறிப்பாக, பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேதமின்றி, எல்லோருக்கும் நன்மையளிக்கக்கூடிய வகையில் அமைய வேண்டும். அத்துடன், அவர்களது உரிமைகளை மதிக்கக்கூடிய வகையிலும் அது இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் மட்டுமே, இந்நாட்டில் ஒரு நிலையான சமாதானத்தை எதிர்பார்க்க முடியும் - என்றார். (ப)

# வெடிபொருள்கள் மீட்பு

வவுனியா, கனகராயன்குளம், குஞ்சுக்குளம் பகுதியில் நிலத்தில் புதையுண்ட நிலையில் காணப்பட்ட வெடிபொருள்கள் விசேட அதிரடிப் படையால் நேற்றையதினம் மீட்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் உள்ள காணி ஒன்றை சீரமைப்புச் செய்வதற்கான வேலைகள் இடம்பெற்று வந்த நிலையில் நிலத்தில் சந்தேகத்துக்கிடமான பொருள்கள் இருக்கின்றமை அவதானிக்கப்பட்டு கனகராயன்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற விசேட அதிரடிப்படையினர் வெடிக்காத நிலையில் காணப்பட்ட 8 மோட்டார் ஷெல்களை மீட்டுள்ளனர். நீதிமன்ற உத்தரவுடன் அந்த வெடிபொருள்கள் செயலிழக்கச்செய்யப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ப-110)

# இந்தியாவில் பட்டம்பெற்ற 113 பேரின் நியமனம் நீக்கம்

அரசின் வேலைவாய்ப்பு திட்டத்தில் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்று கல்விகற்று பட்டம்பெற்ற 113 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று வவுனியா மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அண்மையில் அரச வேலைவாய்ப்புக்காக தெரிவுசெய்யப்பட்ட 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கான பெயர்ப்பட்டியலை அரசு வெளியிட்டிருந்தது. நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளின் விவரங்களும் அதற்கான காரணங்களும்கூட அதில் வெளியிடப்பட்டிருந்தன.

போது புலம்பெயர்ந்து இந்தியாவுக்குச்சென்று அங்குள்ள பல்கலைக்கழகங்களில் படித்து பட்டம்பெற்று மீண்டும் நாடு திரும்பியவர்களின் விண்ணப்பங்களும் குறித்த பட்டியலில் நிராகரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் 27, வவுனியா 18, யாழ்ப்பாணம் 66, முல்லைத்தீவில் 2 பேருமாக மொத்தம் 113 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு பட்டம் என்ற காரணத்தை முன்வைத்தே அவர்களின் தொழில் வாய்ப்பு நிராகரிக்கப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்டவர்கள் கவலை

# அனுமதி அட்டைகளை பெறவும்

யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் 2019ஆம் ஆண்டு 2ஆம் பருவகால அனைத்து கற்கை நெறிகளினதும் இறுதியாண்டு மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த சாதாரண, மீள் மற்றும் விசேட மீள் பரீட்சார்த்திகள் பரீட்சை அனுமதி அட்டைகளை துறைத் தலைவர்களிடம் பெற்றுக் கொள்ளமுடியும். (ஐ)

# தொடர் மின்சாரத் துண்டிப்பு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது

### தெளிவுபடுத்துமாறு ஐ.ம.ச வலியுறுத்து

கொழும்பு, ஓக. 21

தொடர்ச்சியான மின் துண்டிப்புகள் தொடர்பில் தமக்குச் சந்தேகம் எழுந்துள்ளதாகத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹுமான் இது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு எனவும் சுட்டிக்காட்டினார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரு வாரங்களுக்குள் திடீர் மின்சாரத் துண்டிப்புக்கள் இடம்பெற்று வருகின்றமை நாட்டு மக்களுக்கு மாத்திரமின்றி எமக்கும் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன. இதேவேளை நான்கு நாள்களுக்கு தினந்தோறும் ஒரு மணித்தியாலம் மின்சாரத்தைத் துண்டிப்பதாக மின்சாரசபை அறிவித்துள்ளது. இதற்கான அவசியம் என்ன? தற்போது காலநிலை மாற்றம் எதுவும் ஏற்படவும் இல்லை. இவ்வாறான தீர்மானம் எடுப்பதற்கு எந்த விடயம் தாக்கம் செலுத்தியுள்ளது என்பதை அரசாங்கம் நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். மின்சார விநியோகத்தின் போது பல மோசடிகள் இடம்பெற்று வந்துள்ளமையைக் கடந்த காலங்களில் நாம் கண்டறிந்திருந்தோம். இந்தச் செயற்பாடுகள் மீண்டும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றனவா? என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வின் கடந்த கால ஆட்சியின் போது நுரைச்சோலையில் அனல் மின் நிலையத்தை அமைப்பதற்காக பெரும் பணம் செலவிடப்பட்டிருந்தது. தற்போது மின் விநியோகம் தொடர்பில் சிக்கலை ஏற்படுத்தி மீண்டும் ஓர் அனல் மின் நிலையத்தை உருவாக்கும் எண்ணத்திலா இவ்வாறான மின்துண்டிப்புகள் இடம்பெற்று வருகின்றன என்று எமக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது - என்றார். (ப)

### சட்டத்தரணி ஹிஸ்புல்லாஹ் விவகாரம்;

# சாட்சியங்களைச் சமர்ப்பிக்குமாறு சி.ஐ.டிக்கு கோட்டை மன்று உத்தரவு

**கொழும்பு, ஓக. 21**

**உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலைத் தாக்குதல்கள் குறித்த விசாரணைகளுக்காகக் கைதுசெய்யப்பட்டு சி.ஐ.டியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் விவகாரத்தில், இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்துச் சாட்சியங்களினதும் சுருக்கத்தை மன்றுக்குச் சமர்ப்பிக்குமாறு கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்க சி.ஐ.டிக்கு உத்தரவிட்டுள்ளார்.**

சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி வசந்த நவரத்ன பண்டார முன்வைத்த கோரிக்கையை ஏற்று அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கடந்த 2019 உயிர்த்த ஞாயிறு தினமான ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல் சம்பவத்தை மையப்படுத்திய நீதிவான் நீதிமன்ற வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

இதன்போது சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் மன்றில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. அவரிடம் தடுப்புக் காவலில் தொடர்ந்து விசாரணை இடம்பெறுவதாக சி.ஐ.டி. சார்பில் அறிவிக்கப்பட்டது.

சட்டத் தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் சார்பில் சட்டத்தரணிகளான ஹபீல் பாரிஸ், ரணலா சேனாதீர, சஞ்சீவ, ஹசான் நவரத்ன பண்டார ஆகியோருடன் ஜனாதிபதி சட்டத்தரணி வசந்த நவரத்ன பண்டார மன்றில் முற்பட்டனர்.

இதன்போது மன்றுக்கு விடயங்களை முன்வைத்த ஜனாதிபதி சட்டத்தரணி வசந்த நவரத்ன பண்டார, சி.ஐ.டி. மன்றுக்கு சமர்ப்பிக்காமல் வைத்துள்ள அனைத்துச் சாட்சிகளையும் மன்றுக்கு சமர்ப்பிக்க உத்தரவிட வேண்டும் எனக் கோரினார்.

இதனை ஆராய்ந்த நீதிவான் ரங்க திஸாநாயக்க, திறந்த மன்றில் அனைவருக்கும் நீதி சமமாக இருக்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டியதுடன், ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் தொடர்பில் இதுவரை செய்யப்பட்ட விசாரணைகளில் பதிவு செய்யப்பட்ட அனைத்துச் சாட்சியங்களினதும் சுருக்கத்தை அடுத்த வழக்குத் தவணையில் மன்றில் சமர்ப்பிக்குமாறு சி.ஐ.டிக்கு உத்தரவிட்டார்.

அதன்படி அடுத்த வழக்குத் தவணை எதிர்வரும் செப்ரெம்பர் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ப)

# 19ஆவது திருத்தம் நீக்கம்; சு.க. இன்னும் முடிவில்லை

### இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 21

19ஆவது அரசமைப்புத் திருத்தம் நீக்கப்படுவதற்கு அல்லது அதில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு யோசனைகள் முன்வைக்கப்பட்டால் கட்சித் தலைமைத்துவம் மற்றும் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே சுதந்திரக்கட்சி இறுதித் தீர்மானத்தை எடுக்கும் என்று மின்உற்பத்தி இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

19ஆவது அரசமைப்புத் திருத்தம் நீக்கப்படுவதற்கு அல்லது அதில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஆளும்தரப்பின் ஒரு சில உறுப்பினர்கள் அல்லது அமைச்சர்களே கருத்துக்களை முன்வைத்துக் கொண்டிருக்கின்றனர். எனினும் உயர் மட்டத்திலிருந்து இது வரையில் உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. எந்தத் தீர்மானமானாலும் அறிவிப்புக் கிடைத்த பின்னரே எடுக்க முடியும். இவ்விடயம் பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டாலும் ஆதரவளிப்பதாகவோ அல்லது எதிர்ப்பதாகவோ உடனடியாக எதனையும் கூறி விட முடியாது. சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கட்சியின் ஏனைய முக்கியஸ்தர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே தீர்மானிக்க முடியும் - என்றார். (ப)

# தாம் நினைத்தது போன்று புதிய அரசு ஆட முடியாது

### கடிவாளம் போடுவோம் என்கிறது சஜித் தரப்பு

கொழும்பு, ஓக. 21 .

நிறைவேற்று அதிகாரம் மற்றும் நாடாளுமன்ற அதிகாரங்களைத் தங்களது விருப்பத்திற்கு ஏற்ப அரசாங்கத்தால் மாற்ற முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டுக்கும் மக்களுக்கும் தீங்கை ஏற்படுத்தும் எத்தகைய முடிவை அரசாங்கம் எடுத்தாலும் அதற்கு எமது எதிர்ப்பைத் தெரிவிப்போம். நாங்கள் மக்களின் மத்தியிலிருந்து அவர்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்கும் எதிர் தரப்பினராகவே செயற்பட விரும்புகின்றோம். எமது கட்சியில் ஆளும் தரப்பினருடன் ஒப்பந்த அரசியல் செய்யும் ஒருவரும் இல்லை. கொவிட் 19 வைரஸ் பரவலுக்கு மத்தியிலும் ஐக்கிய மக்கள் சக்திக்கு குறுகிய காலத்தில் மக்கள் ஆதரவைப்பெற்றுக் கொடுத்துள்ளனர். அவர்களுக்கு நாங்கள் சேவை செய்ய எதிர்பார்த்திருப்பதுடன், எதிர்வரும் காலத்தில் ஆட்சியைக் கைப்பற்றவும் எதிர்பார்த்திருக்கின்றோம். 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் அரசாங்கம் பேசி வருகின்றது. எம்மைப் பொறுத்தளவில் அரசமைப்பின் 19 ஆவது சரத்தில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது என்பதை ஏற்றுக் கொண்டாலும், அதனை முழுமையாகத் திருத்த வேண்டிய அவசியம் இல்லை. அரசமைப்பின் 19 ஆவது சரத்தில் ஜனநாயகத் தன்மைமிக்க நாட்டில் பின்பற்ற வேண்டிய பல ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை. தங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்துள்ளதால் தாம் எந்தத் தீர்மானத்தையும் எடுக்க முடியும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் இருந்தாலும், ஒரு சில தீர்மானங்களை மக்கள் தீர்ப்பைப் பெற்றுக் கொண்டதன் பின்னரே எடுக்க முடியும். 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி ஒருவர் எத்தனை முறை வேண்டும் என்றாலும் பதவியில் இருக்கலாம் என்ற அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்த போதிலும் அவர் மக்களால் தோல்வியடையச் செய்யப்பட்டார். எனவே இந்த விடயங்கள் தொடர்பில் மாற்றங்களை ஏற்படுத்த விரும்பினால் அவர்கள் மக்களாலேயே புறக்கணிக்கப்படுவார்கள் - என்றார். (ப)

# ஊடக சுதந்திரம் சுயாதீனத்தை சீண்டக்கூடாது

### எச்சரிக்கிறார் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய



கொழும்பு, ஓக. 21

மனித உரிமைகள், ஊடக சுதந்திரம் போன்றவை பாதுகாக்கப்பட வேண்டியவையே என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துக்களும் இல்லை. எனினும் அவை எமது நாட்டின் சுயாதீனத்துவத்தைப் பாதிக்காத வகையில், எமக்கு ஏற்புடையதாக அமைந்திருக்க வேண்டும் என்று பிராந்திய உறவுகள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போது உலகம் வெகுவாக மாற்றமடைந்து செல்கிறது. அரசியல், பொருளாதார, சமூக, கலாசாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் நாம் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படலாம். இன்னும் 20, 25 வருடகாலத்தில் இந்த உலகம் பெருமளவிற்கு மாற்றமடைந்திருக்கும். நாடு என்ற வகையில் அதற்கு ஈடுகொடுத்து நாம் எவ்வாறு பயனடைவது என்பது குறித்துச் சிந்திக்கவேண்டும். சில பலம்வாய்ந்த நாடுகள் மனித உரிமைகளை வலுப்படுத்தல், ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தல் போன்றவற்றைக் காரணங்களாகக்கூறி வறிய அல்லது அபிவிருத்தியடைந்துவரும் சிறிய நாடுகளின் மீது தமது வல்லாதிக்கத்தைச் செலுத்த முற்படுகின்றன. மனித உரிமைகள், ஊடக சுதந்திரம் போன்றவை பாதுகாக்கப்பட வேண்டியவையே என்பதில் எவ்வித மாற்றுக்கருத்துக்களும் இல்லை. எனினும் அவை எமது நாட்டின் சுயாதீனத்துவத்தைப் பாதிக்காத வகையில், எமக்கு ஏற்புடையதாக அமைந்திருக்க வேண்டும். எனவே இவ்விடயத்திலும் நாம் விசேட கவனம் செலுத்துவோம் - என்றார். (ப)

# பயிற்சிபெற்ற தொழிலாளர்களே ஜப்பானுக்கு அதிகளவில் தேவை

## ஏழை குடும்பங்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்கிறார் அமைச்சர் நிமல்



**கொழும்பு, ஓக. 21**

**ஜப்பானுக்கு பயிற்சிபெற்ற தொழிலாளர்களை அனுப்பும் போது ஏழைக் குடும்பங்களுக்கும், சமுர்த்தி பெறும் குடும்பங்களின் உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு வழங்க வேண்டும் என்று தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**

பொருளாதார ரீதியில் கட்டியெழுப்ப வேண்டிய வறுமைக் கோட்டிலுள்ள குடும்பங்கள், சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கு இந்தச் சந்தர்ப்பம் கிடைக்காமல் உள்ளது. அரச மற்றும் தனியார் பிரிவுகள் இரண்டிலும், வெளிநாட்டு வேலைவாய்ப்புகளிலும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

ஜப்பான் நிறுவனத்தினர் மற்றும் ஜப்பான் தொழில் சந்தர்ப்பத்துக்காக இலங்கையில் உரிமம் பெற்றவர்களுக்கு இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்போது அதிகளவான இலங்கையர்களுக்கு ஜப்பானில் தொழில் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக அந்த நாட்டு தொழிலுக்கான பயிற்சியும் ஜப்பான் மொழிப் பயிற்சியும் வழங்க வேண்டியது அவசியம் என்று ஜப்பான் நிறுவன அதிகாரி தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பணியாளர்களுக்கு ஜப்பானில் அதிக கோரிக்கை உள்ளதாகத் தெரிவித்த அவர், இங்குள்ளவர்களுக்கு அதிகளவான தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கும் இணக்கம் தெரிவித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (து)

# ‘13’ நீக்கப்படாது

## *அகில இலங்கை தமிழர் மகாசபை நம்பிக்கை*

கொழும்பு, ஓக. 21

13ஆவது திருத்தச்சட்டத்தை அகற்ற மாட்டோமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகத் தலைவர் பஸில் ராஜபக்ஷவும் அக்கட்சியின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும் உறுதியளித்துள்ளனர் என்று அகில இலங்கை தமிழர் மகாசபை தெரிவித்துள்ளது. இந்த உறுதிப்பாட்டை அடுத்தே ஜனாதிபதித் தேர்தலின்போதும், அதன் பின்னரான நாடாளுமன்றத் தேர்தலின்போதும் அவர்களுக்கு ஒத்துழைப்புக்களை வழங்கினோம் என்றும் அகில இலங்கை தமிழர் மகாசபை குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் அகில இலங்கை தமிழர் மகாசபையின் தலைவர் கலாநிதி.கே.விக்கினேஸ்வரன் தெரிவித்ததாவது;

13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுலாக்கப்படுவதிலிருந்தே அதிகாரப் பகிர்வு சம்பந்தமான விடயங்கள் பற்றி அடுத்த கட்டப் பேச்சுக்களை அல்லது செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாக இருக்கின்றது. ஜனாதிபதி வேட்பாளரை பொதுஜன தெரிவு செய்வதற்கு முன்னதாகவே எமது ஆதரவை எத்தகையதொருவருக்கு வழங்குவோம் என்பது பற்றித் தெளிவாகக் கூறிவிட்டோம்.

நாம் கடந்த ஆண்டு ஜூலையில் பஸில் ராஜபக்ஷவைச் சந்தித்தோம். அதன்போது, 13ஆவது திருத்தச்சட்டத்திலிருந்து ஆரம்பித்து அடுத்தகட்டம் தொடர்பில் சிந்திக்கும் வேட்பாளருக்கு நாம் ஆதரவளிப்பதாகக் கூறியிருந்தோம். அத்தருணத்தில், பஸில் ராஜபக்ஷ , தங்களுடைய தரப்பில் யார் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டாலும் 13ஆவது திருத்தம் பாதுகாக்கப்படும் என்று உறுதியளித்தார். அதன் பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தபோது அவரும் அவ்வாறான உறுதிப்பாட்டையே வழங்கியிருந்தார். பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸும் உடன் இருந்தார். ஆகவே 13 ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசால் உடடியாக நீக்க முடியாது. அதற்கு இந்தியாவும் வாய்ப்பளிக்கப் போவதில்லை - என்றார். (ப)

# பணிப்பெண்ணின் வங்கிக் கணக்கில் 2 கோடி ரூபா வந்தது எப்படி?

## *விசாரணைகளை ஆரம்பித்தது பொலிஸ்*

கொழும்பில் பணிப்பெண்ணாக பணிபுரியும் பெண்ணொருவரின் வங்கிக் கணக்கில் பெருமளவு பணம் இருந்தமையால் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் வர்த்தகரின் வீட்டில் வேலைசெய்த பணிப்பெண்ணின் வங்கிக் கணக்கிலேயே 2 கோடி ரூபாவை விடவும் அதிக பணம் உள்ளதாக தெரியவந்துள்ளது.

அதற்கமைய அந்தப் பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிராண்ஸ்ட்பாஸ் பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு பெண்ணைக் கைது செய்துள்ளனர்.

ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் வழங்கிய தகவலுக்கமைய அந்த பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப்பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அவர் 70 வயதுடைய உடல் ஊனமுற்ற தாய் ஒருவரை பார்த்துக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அவரது வங்கிக்கணக்கை சோதனையிடும் போது இரண்டரைக் கோடி ரூபா பணம் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளதென பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பெண்ணின் வங்கிக் கணக்குக்கு இவ்வளவு தொகைப் பணம் எவ்வாறு வந்தது என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (து)

# சடலமாக மீட்கப்பட்ட பெண் அடையாளம் காணப்படவில்லை

## *வல்லுறவின் பின் கொலையா?*

தலைமன்னார், ஓக. 21

மன்னார் உப்பளப் பகுதியில் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட இளம்பெண்ணின் சடலம் மன்னார் பொதுமருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. எனினும், ஒரு வாரமாகியும் சடலம் அடையாளம் காணப்படவில்லை. அதை அடையாளம் காணுமாறு பொலிஸார் கோருகின்றனர்.

கடந்த 13 ஆம் திகதி காலை மன்னார் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து மன்னார் உப்பளப் பகுதியில் தண்ணீர் ஓடைக்குள் காயங்களுடன் இளம் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது. இன்று வரை மன்னார் மருத்துவமனை பிரேத அறையிலேயே அது வைக்கப்பட்டுள்ளது. அதை அடையாளம் காணுமாறு கோரியும் அடையாளம் காணப்படவில்லை.

இந்தப் பெண் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. (கு-60)

# காயமடைந்த பொலிஸ் அதிகாரி உயிரிழப்பு

மாத்தறை ஹக்மனைப் பகுதியில் இடம்பெற்ற டிப்பர் வாகன விபத்தில் சிகிச்சை பெற்று வந்த மற்றொரு பொலிஸ் அதிகாரி நேற்று உயிரிழந்துள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 13 ஆம் திகதி மாத்தறை ஹக்மனை பகுதியில், டிப்பர் வாகனம் மோதியதில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்தமையுடன். மேலும் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஒரு பொலிஸ் அதிகாரி மாத்தறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது இதேவேளை காயமடைந்த மற்றைய பொலிஸ் அதிகாரி குணமடைந்து வீடு திரும்பியுள்ளார். (ப)

# கைதடி இணுங்கித்தோட்ட கந்தனுக்கு ஞாயிறன்று கொடி

யாழ்ப்பாணம், ஓக. 21

கைதடி இணுங்கித் தோட்டம் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருந்திருவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது என்று கோவில் பரிபாலன சபை தெரிவித்தது.

அன்று மதியம் 12 மணிக்கு கொடியேற்றம் நடைபெறும். எதிர்வரும் 30ஆம் திகதி இரவு 7 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் 31ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு சப்பரத் திருவிழாவும் முதலாம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் முற்பகல் 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவில் பிரதம குரு சிவஶ்ரீ யோ. குருசாமிக்குருக்கள் மற்றும் மஹோற்சவ குரு சிவஶ்ரீ நா.பாலஸ்கந்தரூபக் குருக்கள் தலைமையில் பூசை வழிபாடுகள் நடைபெறும். (து)

# மாணவன் மீது பாலியல் தொல்லை

## *ஆசிரியருக்கு விளக்கமறியல்*

கொழும்பு, ஓக. 21

12 வயது சிறுவனை துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஆசிரியரை தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் கைதுசெய்துள்ளது.

கணித வகுப்பில் கலந்துகொள்ள வேண்டும் என்ற போர்வையில் வீட்டுக்கு வந்த ஆசிரியர், சில காலமாக குறித்த சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்து வந்துள்ளார் என்று குழந்தைகள் பாதுகாப்பு ஆணையத்தின் சிறப்பு புலனாய்வுப்பிரிவுக்குகடந்தமாதம் வழங்கப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அந்த ஆசிரியர் ஓகஸ்ட் 17ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

பாதிக்கப்பட்ட சிறுவன் முதலில் ஒரு நண்பரிடம் 2018ஆம் ஆண்டு நடந்த சம்பவம் குறித்துக் கூறியுள்ளார். பின்னர் இந்தச் சம்பவம் குறித்து பெற்றோரிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, சிறுவனும் அவரது பெற்றோரும் அண்மையில் குழந்தைகள் பாதுகாப்பு ஆணையத்திடம் முறைப்பாடு செய்தனர். பாதிக்கப்பட்ட சிறுவனின் தந்தை பல்கலைக்கழக விரிவுரையாளர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (து)

## மரண அறிவித்தல்

# மயிலன் கட்டையன்



தோற்றம் - 29.07.1947
இறப்பு - 20.08.2020

கைதடி தெற்கு இயத்தையைப் பிறப்பிடமாகவும் கைதடி கலைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட மயிலன் கட்டையன் நேற்று (20.08.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயிலன் - நாகி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இளையவன் - சின்னம்மா தம்பதியரின் அருமை மருமகனும் காலஞ்சென்ற சீதேவியின் பாசமிகு கணவரும் தயாளன் (உள்ளூராட்சி அமைச்சு, வடமாகாணம்), தயாபரன் (லண்டன்), தயாநிதி (லண்டன்), தயாகரன் (சுவிஸ்), தயாழினி, தயாநந்தன் (விவசாயத் திணைக்களம், யாழ்ப்பாணம்), தயாநளன் (கல்வி அமைச்சு, வடமாகாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிறேமளா, புவனேஸ்வரி (லண்டன்), நந்தா (லண்டன்), மஞ்சுளாராணி, பிரதீப் ( இலங்கைப் போக்குவரத்துச் சபை, வடமாகாணம்), சுபலா, திருமாழினி ஆகியோரின் அருமை மாமனும் பிரியங்கா, மிதுர்னா, கோகுல், தமிழவன் (லண்டன்), அபினா (லண்டன்), சகானா (லண்டன்), அஜன் (லண்டன்), கிருசாணி, அகாஷ், சேயவன், நயன், சர்யுன் ஆகியோரின் அன்புப் பேரனும் விகானின் (லண்டன்) பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2020) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் கைதடி ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி கிழக்கு,
கலைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 6155 443, 077 8037 804
077 6219 803



## மரண அறிவித்தல்



# சவரிமுத்து பிரான்சிஸ் (யோகு)

**(யாழ் மாநகரசபை முன்னாள் பணியாளர்)**

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் முன்நாள் யாழ். மாநகரசபை ஊழியருமாகிய யோகு என அன்பாக அழைக்கப்படும் சவரிமுத்து பிரான்சிஸ் நேற்று (20.08.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், பர்நாந்து அன்னமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும், மேரி மார்கிரட் நல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுவக்கீன், எலியாஸ், அருளானந்தம், மரியதாஸ் மற்றும் ஸ்ரனிஸ்லாஸ் செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரனும். காலஞ்சென்றவர்களான யேசு, பொனிப்பாஸ், ஜேம்ஸ், புஸ்பராணி, ராசாத்தி, றெஜினாமணி, பூமணி, மாகிறேற் மற்றும் ஜெயமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பெனடிக்ற் (ஜேர்மனி), ஜசிந்தா (ஜேர்மனி), சாந்தி, பிறேடா, குயின்ரன் (யாழ். போதனா வைத்தியசாலை), ராசா, றெக்சன் (பிரான்ஸ்), டெலா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பொன்மலர், பாஸ்கரன் (ஜேர்மனி), ஜெயசிங்கரட்ணம், டவ்னி அன்ரனற் (ஆசிரியர், சென் றோக்ஸ் பாடசாலை), ராஜி, சோபா (பிரான்ஸ்), அருள்தாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பற்றிக் தர்ஷா, அருள்ராசா டிலக்ஷி, அஜித் ஜனா, யூலன் எட்வினா, கஜானா, பிரான்டன், பிரைட்டன் நிவேதா, பிருந்தா, விதுஷா, விதுஷன், வினுறன், சஜிதா, நிருஜா, ஜெருஷன், பிரியா, கீர்த்தி, றிதுஷா, நிதுஷா, இவானா, அலுசியா, றொனிஷா, றொனிஷன், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும், அஸ்வின், பிறின்ஷா, றித்விக் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்புத்துறை சென் மேரிஸ் 2ம் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று (21.08.2020) பி.ப. 3.00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, புனித செபமாலை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொழும்புத்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு : 077 6258 206, 077 9251 435


# அடிப்படை உதவிகள் ஏதுமின்றி பல்கலை. மாணவர்கள் சிரமம்

## யாழ். பல்கலை கலைப்பீட மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக.21

பல்கலைக் கழக மாணவர்களுக்கான அடிப்படை உதவிகளையும், வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று பல்கலைக் கழகப் பேரவையிடமும், துணைவேந்தர் மற்றும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமும் கோரி க்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கலைப்பீட மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்ததாவது

கொரோனோத் தொற்றுக் காலத்தில் பல்கலைக் கழக கற்றல் செயற்பாடுகள் நடைபெறாததால் விடுதிகளிலும் வாடகை வீடுகளிலும் தங்கியிருந்த மாணவர்கள் வெளியேறியிருந்தனர். தற்போது அந்தக் காலப்பகுதிக்கான வாட்கைகளைத் தர வேண்டும் என்று உரிமையாளர்கள் கோருகின்றனர்.

அதேநேரம், பல்கலைக் கழகத்திலும் அடிப்படை வசதிகள் இல்லாது மாணவர்கள் அவதியுறுகின்றனர். இவற்றைச் சம்பந்தப்பட்டவர்கள் கருத்தில் எடுத்து உரிய நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள கொள்ள வேண்டும் என்று கோருகின்றோம் - என்றார். (எ)


### தோட்ட வேலைக்கு ஆள் தேவை

நன்கு அனுபவம் வாய்ந்த 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**076 645 8087**



### கடை வாடகைக்கு

18 அடி அகலமும், 60 அடி நீளமும் கொண்ட கடையின் மேல் பகுதி (1ம் மாடி) கஸ்தூரியார் (யாழ் நகர்) வீதியில் வாடகைக்கு உண்டு. முற்பணம் 500,000 வாடகை 30,000

**077 993 8348**



## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 21 | 13 |
| 03 | 08 |
| 1945 | 2020 |



# சிவகாமசுந்தரி யோகநாதன்

யாழ்ப்பாணம், தொல்புரத்தை பிறப்பிடமாகவும் சித்தகேணி திருகோணமலை மற்றும் பிரித்தானியா **New Malden**ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவகாமசுந்தரி (குஞ்சு) யோகநாதன் அவர்கள் 13.08.2020 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் நீலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகளும், சங்கம் வீதி நுணாவில் கிழக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ் சென்ற விஸ்வலிங்கம் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் யோகநாதன் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகஸ்தர், கல்வித்திணைக்களம் - யாழ்ப்பாணம், திருகோணமலை) அவர்களின் அன்பு மனைவியுமாவார். இவர் **DIT** முத்துக்குமார் மயில் வாகனத்தின் பெறாமகளும் உமாகஜேந்திரனின் **(UK)** அன்பு தாயாரும், ஆர்த்தியின் அன்பு மாமியாரும், ஹனீற்றா, சான்வி அவர்களின் அன்பு பேத்தியும் ஆவார். அன்னார் தில்லையம்பலம் (துரை - **Vancover**) தில்லைநாதன் (மணி - **Vancover**) தில்லைவாசன் (கிளி - **Germany**) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்ற சிவகுருநாதன், நாகம்மா, மற்றும் மகேஸ்வரி, அருளம்மா, நேசமலர், தில்லைநாதன், தம்பிநாதன், செல்வராணி, செல்வமலர், சிவநாதன், ஆகியோரின் மைத்துனியுமாவார்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தொடர்புகளுக்கு : 00447552723048


# ஜனநாயக விழுமியத்தை உறுதிப்படுத்த வேண்டும்

## கஜேந்திரகுமார் தெரிவிப்பு

எமது மக்களின் ஜன்நாயக ஆணை தொடர்பிலான நேர்மையான கலந்துரையாடல்களுக்கு இடம் வழங்குகின்ற ஜனநாயக விழுமியத்தைப் பேணுவதற்கான கடப்பாட்டை உறுதிப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம். அவர் மேலும் தெரிவித்ததாவது

முன்னெப்போதும் இல்லாதவாறு ஒருமுனைப்படுத்தப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட நாடாளுமன்றாக இந்த 9ஆவது நாடாளுமன்று விளங்கு கின்றது.

இந்த ஒருமுனைப்படுத்தப்பட்ட நாடாளுமன்றத்தில் மறுபக்கத்தில் மக்கள் பிரதிநிதிகளாக அமர்ந்திருக்கும் எமக்கு மக்கள் அளித்துள்ள ஜனநாயக ஆணைக்குரிய மதிப்பையும், கௌரவத்தையும் கொடுத்து எமது மக்களின் ஜன்நாயக ஆணை தொடர்பிலான நேர்மையான கலந்துரையாடல்களுக்கும் இடம் வழங்குகின்ற ஜனநாயக விழுமியத்தைப் பேணுவதற்கான கடப்பாட்டை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்றார். (எ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 29 . 05 . 1925

மறைவு 20 . 08 . 2020

### சின்னத்தம்பி சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர்)

யாழ். மாதகலை பிறப்பிடமாகவும் திருகோணமலை, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் நேற்று (20.08.2020) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி - இராமாசி சின்னத்தம்பி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை வினாசித்தம்பி - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தனலட்சுமி அம்மாவின் அன்புக் கணவரும், திருமதி குலஞானேஸ்வரி - சுப்பிரமணியம், திருமதி விஜயராணி - சிறிகந்தராஜா (லண்டன்), கிருஷ்ணகுமார் (ஓய்வுபெற்ற வலயக் கல்விப்பணிப்பாளர், பணிப்பாளர் IMHO Lanka), சிவகுமார் (இந்தியா) திருமதி இந்திரா - மனோகரன், காலஞ்சென்ற கருணாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பொன்னம்மா - கந்தையா மற்றும் வேலுப்பிள்ளை அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வி.சுப்பிரமணியம் (பிரதேசசபை உறுப்பினர், வலி தென் மேற்கு பிரதேசசபை) Dr.C. சிறிகந்தராஜா (லண்டன்), காலஞ்சென்ற நிர்மலதில கேந்திரா கிருஷ்ணகுமார், திருமதி உமாசங்கரி சிவகுமார், காலஞ்சென்ற மனோகரன் ஆகியோ ரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2020) வெள்ளிக்கிழமை இல.3/6, பழைய தபால்கந்தோர் வீதி, கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று பூவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமாயனத் துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்

**3/6, பழைய தபால் கந்தோர் வீதி,**
**கொக்குவில் கிழக்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
077 351 5558, 076 814 3235

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



பிறப்பு 30 . 06 . 1943

இறப்பு 06 . 08 . 2020

கடந்த (06.08.2020) வியாழக்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

அமரர் திருமதி

### சின்னராஜா இராஜேஸ்வரி

(தவில் மாமேதை N.R. சின்னராஜாவின் அன்பு மனைவி)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (20.08.2020) வியாழக்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (21.08.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு உங்களை அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.**

**கோவில் வாசல்,**
**இணுவில் மேற்கு, இணுவில்.**

**குடும்பத்தினர்**
**077 628 0254, 077 519 4510**

## மரண அறிவித்தல்



பிறப்பு 04 . 01 . 1952

இறப்பு 17 . 08 . 2020

### வேலன் பாலேந்திரன்

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் பாலேந்திரன் கடந்த (17.08.2020) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன் சீதேவி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இரத்தினம், யோகநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், யோகராணியின் (லண்டன்) அன்புக் கணவரும், விஸ்ணுகரா, அமிர்தா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சுபத்திரை மற்றும் பாலகிருஸ்ணன், காலஞ்சென்றவர்களான நடராஜா, இரத்தினம் மற்றும் பரமநாதன் பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (24.08.2020) திங்கட்கிழமை லண்டனில் உள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, பின்னர் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சங்கரப்பிள்ளை வீதி,**
**ஆனைக்கோட்டை.**

**தகவல்:**
**சகோதரர்கள்.**

தொடர்பு : 077 88 36 783, 077 48 11 919

## மரண அறிவித்தல்



பிறப்பு 25 . 02 . 1943

இறப்பு 20 . 08 . 2020

### சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை

அல்லாரையைப் பிறப்பிடமாகவும், வீரசிங்கம் வீதி, சங்கத்தானை சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை நேற்று (20.08.2020) வியாழக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்பு கணவரும், சின்னத்தம்பி-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து தங்கம் மாவின் அன்பு மருமகனும், தயாநிதி, கலாநிதி, சிவாநிதி, இந்துநிதி, பத்மநிதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சிவகுமார், ஜெகதீஸ்வரநாதன் (கேதன்), புஸ்பராஜ், ஜெபநேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜீதா, சஜீதா (கனடா), வனிதா, சலீபன், ஜனனி, யோன்சனா (இ.மி.ச), நிலுாயன் (பிரான்ஸ்), கபீதன், அஸ்வின் அஜித்தா, துளசிகா, துர்க்கா, துவாரகா, துவாரகன், ஷம்சன், டருன், துலக்சன், துஸ்யந்தி, துலக்சிகா ஆகியோரின் பேரனும், தர்சனா, கஜானா, பிரவீனா, பிரவீன், சுமன், பாஸ்கரன், ஜெயகாந்தன், காண்டீபன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வீரசிங்கம் வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

தொடர்பு : 077 522 3221

5 ஆம் ஆண்டு நினைவலைகள்




பெஞ்சமின் குணநாயகம்

தோற்றம் – யாழ்ப்பாணம்
03.03.1946

மறைவு – பிரான்ஸ்
21.08.2015

அன்றும் இன்றும் என்றும்
நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
152/1, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
12.08.1941

மறைவு
21.08.2019

அமரர்
நாகலிங்கம் நித்தியானந்தன் - J.P
(ஓய்வுபெற்ற கணக்காளர் - பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்.
தவிசாளர் - நல்லூர் பிரதேச மத்தியஸ்தசபை
திதி: தேய்பிறை சஷ்டி (08.09.2020)

ஆண்டு ஒன்று சென்றாலும்
மாறாத நினைவுகளால்
மனம் வெந்து மாய்கின்றோம்
எங்களுடன் நீங்கள் வாழ்ந்த நாள்கள்
மீண்டும் வாராதா என்றும் தினமும் தேடுகின்றோம்
உங்கள் ஆன்மா சாந்தி பெற
இறைவனை வேண்டுகின்றோம்.

15/9, பொற்பதி வீதி,
கொக்குவில்.
குடும்பத்தினர்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05.02.1939

மறைவு
02.09.2019

அமரர்
இளையவி குணரத்தினம்
திதி: (21.08.2020)

அன்பின் திருவுருவமே
பண்பின் சிகரமே
எம் அன்புத் தெய்வமே
நீங்கள் மறைந்து
பன்னிரண்டு மாதங்கள் ஆனதே
தினம் தினம் உங்கள் முகம் காணாது
ஏங்கித் தவிக்கின்றோமே.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

27, மலர்மகள் வீதி,
அரியாலை.
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## காணி தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் தனியாகவோ அல்லது
வீட்டுடனோ சேர்ந்த காணி தேவை.
(தரகர் தேவையில்லை) 1½ தொடக்கம் 2 பரப்பு காணி
076 667 2217

## பெயர் மாற்றம்


விநாயக முதலியார் வீதி. புலோலி மத்தி பருத்தித்துறையில் வசித்து வரும் **தேவராசா சாந்தி** என்னும் எனதுபெயரை இன்றுமுதல் **தேவராசா சாந்தகுணதேவி** என மாற்றம் செய்கிறேன். இனி வரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என தெரியப்படுத்துகின்றேன்.

தே. சாந்தகுணதேவி

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் K.K.S. வீதியில் (முத்து பிரிண்டேர்ஸ்) முன்பாக 7 1/4 பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு.
தரகர்கள் தேவையில்லை.
தொடர்புகளுக்கு: 077 612 5314

நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
18.02.1945


மறைவு
04.09.2016

அமரர் V.P.வேலாயுதம்பிள்ளை
(முன்னை நாள் உதவி அரசாங்க அதிபர்)
திதி : வளர்பக்க திருதியை

தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தில் வந்துதித்த அப்பாவே - உம் பிரிவை
ஆற்றோம் எம் ஐயா அழுகின்றோம் ஓவென்று
தேற்றுவார் யாருமில்லை தேறுவதற்கும் வழியில்லை
மாற்றமாம் வையகத்து நியதியென நினைந்து
இறைவன் திருவடியில் இன்புற்றிருக்கவென
வேண்டி மனம் ஆறுகின்றோம்.

இல.35/6, குமாரசாமி வீதி,
கந்தர் மடம், யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

ஓராண்டு பூர்த்தியில் நினைவுகூடுகின்றோம்



மண்ணுலகில்
13.03.1946

விண்ணுலகில்
02.09.2019

அமரர் செல்லையா கணபதிப்பிள்ளை
(சாவகச்சேரி நீதிமன்ற பதில்நீதவானும், பிரசித்த நொத்தாரிசும்)

போற்றில் அடங்கா போற்றத்தகு
ஆல விருட்சம் நீ!
கற்றோரும் கண்டு வியந்த
கறைபடியா மாமனிதனும் நீ!
உற்றோரும், உறவினரும் உன்
அருமை கவி பாட
எப்போதும் உன் விழுதுகள் நாம்
பெருமை கொள்கின்றோம்

கறுப்பு ஆடை அணிந்து கம்பீரமாய்
நீ நடந்தால் ...
கற்ற அவையும் உன்னை
உற்று நோக்கும் - உன்
கர்வம் இல்லா சேவையினால்

தன் நலம் நோக்கா பொதுநலம்
நோக்கும் கொள்கை மாறா
இலட்சியவாதியே ...,
பிறப்பாலும் வளர்ப்பாலும் உயர்ந்த
உன்னை
தன்னுடன் அழைத்துச் செல்ல
நல்லைக் கந்தனும் தேரேறி வந்தானோ
இன்னுயிர் துறந்து இறையோடு கலந்த
உங்கள் ஆத்மா சாந்தி அடைய மலர்தூவி
அஞ்சலி செலுத்துகின்றோம்

மனைவி, பிள்ளைகள்.

# தொடர் கடை உடைப்பு: சந்தேகநபர் சிக்கினார்!

வவுனியா, ஓக. 21

வவுனியாவில் கடைகளை உடைத்துத் திருட்டில் ஈடுபட்ட குற்ற சாட்டு க்களுடன் தொடர்புடைய முக்கிய சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஒரு மாத காலப்பகுதிக்குள் வவுனியாவின் நெளுக்குளம், குருமன்காடு, குளுமாட்டுச்சந்தி, வைரவப் புளியங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களை உடைத்து இடம் பெற்ற திருட்டுக்களுடன் தொடர்புடைய நபரே கைதுசெய்யப் பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரிடம் இருந்து தொலை பேசிகள், சிம் காட்கள், வங்கிப்புத்தகம், ஏ.ரி. எம் அட்டை உள்ளிட்ட சில பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-110)

# கோண்டாவிலில் இராணுவத்தினர் சுற்றிவளைப்பு!!

யாழ்ப்பாணம், ஓக. 21

கோண்டாவில் பகுதியில் இராணுவத்தினர் நேற்று மாலை திடீர் சுற்றிவளைப்பில் ஈடு பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கோண்டாவில் மேற்கு பகுதியில் நேற்று மாலை ஏராளமான இராணுவத்தினர் குவிக் கப்பட்டு சுற்றிவளைப்பு நடவடிக்கை முன் னெடுக்கப்பட்டது. அனைத்து வீதிகளிலும் இராணுவத்தினர் சோதனை நடவடிக்கை யில் ஈடுபட்டனர். (ம-20)

## முண்டுக்குளம் சீரமைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21

கிராமம் தோறும் செயற்படுத்தப்பட்டுவரும் சப்ரிகம திட்டத்தின் கீழ் சுண்டுக்குழி தெற்கு ஜே/75 கிராம அலுவலர் பிரிவில் மத்தியூஸ் வீதியிலுள்ள முண் டுக்குளம் இரண்டு மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேற்பார்வையில் கிறீன் பில்ட் சனசமூக நிலையம் ஒப்பந்தத்தைப் பொறுப்பேற்று நிறைவேற்றி வருகின்றது என கிறீன் பில்ட் சனசமூக நிலைய செயலாளர் தி. மைக்கல் அறிவித்துள்ளார். (ஐ)

# நாட்டின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்போம்

## சஜித் தரப்பு எம்.பிக்கள் உறுதி

கொழும்பு, ஓக. 21

புதிய நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள் என்றவகையில் நிறைவேற்றதிகாரத்தின் செயற்பாடுகள் மற்றும் வகைகூறலை உறுதி செய்யும் பொறுப்பு வாய்ந்த எதிர்க் கட்சியாகச் செயற்படுவதுடன், நாட்டின் அபிவிருத்தியை முன்நிறுத்திய நடவடிக்கை களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பி னர்களான ஹர்ஷ டி சில்வா மற்றும் எரான் விக்கிரமரத்ன ஆகியோர் தெரிவித்தனர்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதல் நாள் அமர்வு தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன ஆகியோர் தமது டுவிட்டர் பக்கத்தில் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளனர். (ய)

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 05 பழைய பூங்கா வீதி வரிமதிப்பீட்டு இலக்கம் 87 என்னும் ஆதன இலக்கத்தை கொண்ட ஆதனம் V.சின்னத்தம்பி என்னும் பெயரில் வரிமதிப்பீட்டு பதிவேட்டில் காணப்படுகிறது.

அதன் பின்னகத்தான ஆதன அட்டவணைகளில் நன்கு விபரிக்கப்படுகின்ற ஆதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் 13.05.2019 ஆம் திகதி 10717 ஆம் இலக்கத்தில் ஓர் நன்கொடை உறுதி நிறைவேற்றப்பட்டு தற்போது பிரான்சில் வசிக்கின்ற எட்வின் ரூபன் வின்சன் ஐக்கிய அமெரிக்காவில் வசிக்கின்ற ரவீன் ராங்கன் வின்சன் ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கின்ற ரகுணன் வின்சன் ஆகியோர் தமது தத்துவக் காரியான திருமதி அனற் ரஞ்சினி சத்தியராஜா மூலம் வெளிப்பட்டு தமது சகோதரியான றெஜினோட் ஜீலியட் சாந்தினி என்பவருக்கு குறித்த ஆதனத்தை நன்கொடை அளித்தனர்.

குறித்த 10717 ஆம் இலக்க உறுதியில் தாயுறுதி விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது இவ்வாதனம் 1943 ஆம் ஆண்டளவில் காலஞ்சென்ற எங்கள் பிதா வின்சன் ராஜ்°க்கு பிதாவழி முதுசமாய் வந்தடைந்து எங்களுக்கடைந்த பிதாவழி முதுசமும் எங்கள் நீண்ட கால ஆட்சியுமானதுமாகும் என மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த 10717 ஆம் இலக்க உறுதியில் ஆதன விஸ்தீரணம் தொடர்பில் காணப்பட்ட தவறு தொடர்பில் 24.02.2020 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிச தி.கணதீபன் முகதாவில் 1714 ஆம் இலக்கத்தில் ஓர் வெளிப்படுத்தல் உறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

**ஆதனடாப்பு**

வடமாகாண யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண மாநகரசபை யாழ்ப்பாண பிரதேச செலகம் கிராம அலுவலர் பிரிவு J/ 75 சுண்டுக்குளி இறை "மாவிலங்கையடித்தோட்டமும் அல்லது யம்புத்தோட்டமும்" விஸ்தீரணம் நில.பர. (3) மூன்று இதில் சொரியலாக 5/6 பங்கு ஆட்சிப்படி ஒரே ஆதனமாக காணப்படுவதன் படி இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் அவர்களால் 18.05.2019 ஆம் திகதி 3470 ஆம் இலக்கத்தில் அளந்து தயாரித்த நில அளவைப்படத்தினூடாக அளந்து நன்கொடைக்காரிக்கு நிந்தப்படுத்தப்பட்ட ஒப்படைக்கப்பட்டதன்படி நிலப்பரப்பு ஒன்று குளிகள் எட்டு.

**கிழக்கு** :- பழைய பூங்கா வீதி
**வடக்கு** :- ஞானப்பிரகாசம் பெண் அன்னம்மாவுக்குரிய ஆதனம்
**மேற்கு** :- ஒழுங்கை
**தெற்கு** :- யோசப் பெண் சமினுக்குரிய ஆதனம் இதடங்கலும்.

தற்போது றெஜினோட் ரவீந்திரன் பெண் ஜீலியட் சாந்தினி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதிலிருந்து ஒரு மாத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது றெஜினோட் ரவீந்திரன் பெண் ஜீலியட் சாந்தினி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**இம்மனுவல் ஆனோல்ட்**
**முதல்வர்**
**மாநகரசபை**

# மணி விழா வாழ்த்து

**21.08.2020**

திருமதி **கலாநிதி புவனேந்திரன்** - B.A.
**"கலா வாசா"**
**நல்ல மாவடி வீதி,**
**வட்டுத் தெற்கு,**
**வட்டுக்கோட்டை.**



Best Wishes

எமது குடும்பத்தின் முதலாவது ஆசிரியராக தன் கல்விப் பணியை கடமை, கண்ணியத்துடன் திறம்பட ஆற்றி தனது கற்பித்தலினால் மாணவர் மனத்தில் என்றும் அழியா இடம்பிடித்து எமது குடும்பத்திற்கு பெருமை தேடித்தந்த திருமதி கலாநிதி புவனேந்திரனின் (குட்டி கலா) ஓய்வு காலம் சீரும் சிறப்புமாக அமைய எல்லாம் வல்ல கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்: A.V.S.**குடும்பத்தினர்.**

ES Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

# அறிவித்தல்

**தம்பிப்பிள்ளை நடராஜா (த. நடராஜா -T.N. மாஸ்ரர்)**
(ஓய்வுபெற்ற முன்னாள் கொ தெ / கொழும்பு இந்துக்கல்லூரி பம்பலப்பிட்டி. யா/ அளவெட்டி அருணோதயக் கல்லூரி. ஆசிரியர்)



**டிப்போ ஒழுங்கை, காளிகோயிலடி, மல்லாகத்தை** நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட **த. நடராஜா** ஆகிய நான் **நீதி மனித உரிமைகள்** மற்றும் **சட்ட மறுசீரமைப்பு அமைச்சினால்** நடத்தப்பட்ட பரீட்சையில் **சித்தி எய்தி உத்தரவு பெற்ற மொழிபெயர்ப்பாளர் தமிழ், ஆங்கிலம்** (Sworn Translator Tamil - English ஆன **பதவிக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற கௌரவ நீதிபதி** அவர்கள் முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து நியமிக்கப்பட்டுளேன்.

சகலருக்கும் தேவைப்படும் **ஆவணங்கள், பிறப்பு, விவாக, மரண** அத்தாட்சிப் பத்திரங்களை **மொழிபெயர்த்து உறுதிப்படுத்தி கணினி அச்சில் பெற்றுக்கொள்ளலாம்.**

**20.08.2020** **தம்பிப்பிள்ளை நடராஜா**

# புங்குடுதீவு மேற்கு, இறுப்பிட்டி பெரியபுலம்

# அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய நவகுண்டபக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2020





*திருச்சிற்றம்பலம்*

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை

*திருச்சிற்றம்பலம்*

*விநாயகப் பெருமான் அடியார்களே!*

இதிகாச புராணங்களில் விதந்து போற்றப்பெற்ற இலங்காபுரி குபேரபுரி என்று போற்றப்படும் இலங்கைத் திருநாட்டின் வடபால் சப்த தீவுகளில் சிறந்துவிளங்கும் புங்குடுதீவு மேற்கு, பெரியபுலம் சேத்திரத்தில் வீற்றிருந்து வேண்டியதை வேண்டியருளும் பெருமானுக்கு நிகழும் மங்களகரமான சர்வாரி வருஷம் தக்ஷணாயனம் ஆவணி மாதம் 7 ஆம் நாள் (23.08.2020) ஞாயிற்றுக்கிழமை பஞ்சமி திதியும் சித்திரை நட்சத்திரமும் சித்தயோகமும், பவகரணமும் கூடிய சுப தினத்தில் காலை 06 மணி 09 நிமிடம் முதல் 7 மணி 36 நிமிடம் வரையுள்ள சிம்ம லக்கின சுபமூகூர்த்தத்தில் வீரகத்தி விநாயகப் பெருமான், பஞ்சமுக விநாயகப் பெருமான், சிவகாமி அம்பாள் சமேத நடராசபெருமான், ஸ்தம்ப பிள்ளையார், மூஷிகம், பலிபீடம், மஹாலக்ஷ்மி, வள்ளி தேவசேனாசமேத சுப்பிரமணிய பெருமான், நவக்கிரக தேவர்கள், பைரவ பெருமான், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகளுக்கு கும்பா பிஷேகம் நடைபெற திருவருள் கைகூடி யுள்ளது. அத்தருணம் அதற்கு முன் பின் நடக்கும் கிரியா காலங் களிலும் அடியார்கள் வந்து தரிசித்தும், பால், தயிர், இளநீர், பூக்கள், மாலைகள் தந்துதவியும் எம்பெருமானின் திருவருளைப் பெற்றுய் யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**முக்கிய அறிவித்தல்**

1. கட்டாயம் முககக்கவசம் அணிந்து வரவும்
2. கைகளை நன்றாக கழுவி வரவேண்டும்
3. சமூக இடைவெளி (1 மீற்றர்)யை ஆலயத்திலுள் கடைப்பிடிக்கவும்
4. வயோதிபர்கள், சுகயீனமுற்றோர், சிறுபிள்ளைகள் வருவதை தவிர்க்கவும்

பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேக சிவாச்சாரிய குரு
**சாதகாசார்ய திலகம்**
**சிவஸ்ரீ பால. கணேஸ்வர குருக்கள்** அவர்களின் தலைமையில் (நயினாதீவு நாகபூஷணி அம்மான் கோயில் - நயினாதீவு) நடைபெறவுள்ளது.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

**ஆலய நிர்வாக சபையினரும்**
**கும்பாபிஷேக திருப்பணிச்**
**சபையினரும்**

### 19 ஆவது...

நாட்டுக்குத் தேவையானதும் பொருத்தமானதுமான புதிய அரசமைப்பொன்றை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன்போது 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற எண்ணக்கருவுக்கு முதலிடம் வழங்கப்படும்."

இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் 3 மணியளவில் ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து, ஆற்றிய கொள்கைப் பிரகடன உரையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்தவொரு சக்திக்கும் அடிபணியாது நாட்டின் இறைமையையும் நாட்டு மக்களையும் பாதுகாத்து நாட்டை சுபீட்சத்தை நோக்கிக் கொண்டு செல்வோம்.

கட்டியெழுப்பப்பட்டுள்ள நம்பிக்கையின் காரணமாக இந்த முறை பொதுத் தேர்தலில் மக்கள் உற்சாகமாக எமக்கு ஆதரவு வழங்கியுள்ளனர். அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் மக்களுக்கு தொடர்ந்தும் சேவை செய்வதே அரசின் எதிர்பார்ப்பாகும். எந்தக் காரணத்தாலும் அந்த எதிர்பார்ப்புகள் வீண்போவதற்கு நாம் இடமளிக்க மாட்டோம்.

ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல் இலங்கை தேர்தல் வரலாற்றில் புரட்சியொன்றை ஏற்படுத்திய ஒரு முக்கிய தேர்தலாகும். வரலாற்றில் முதற் தடவையாக விகிதாசார முறைமையின் கீழ் இடம்பெற்ற தேர்தல் ஒன்றில் மூன்றிலிரண்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மக்கள் ஆணையுடன் நிலையான ஆட்சியொன்றை அமைக்கும் வாய்ப்பு அரசுக்குக் கிடைத்துள்ளது. இந்த மக்கள் ஆணையை வழங்கிய நாட்டுப் பற்றுடைய மக்களுக்கு நன்றி.

மக்கள் அரசின் மீது வைத்துள்ள நம்பிக்கையை காப்பாற்றும் வகையில் மக்களுக்கு தொடர்ச்சியாக சேவைகளை வழங்குவோம்.

நாட்டின் அரசமைப்பின் பிரகாரம் எனது பதவிக்காலப் பகுதியில் நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதாகவும், பௌத்த சாசனத்தை பாதுகாத்து வளப்படுத்துவதாகவும் நான் உறுதியளித்திருகின்றேன். அரச நிர்வாகத்துக்காக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னணி பௌத்த பிக்குகளைக் கொண்ட ஆலோசனை சபை ஒன்றை அமைத்துள்ளேன்.

தொல்பொருள் பெறுமதி வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதற்கும் பௌத்த மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கும் விசேட செயலணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பௌத்த சமயத்துக்கான முன்னுரிமையை உறுதிசெய்யும் அதேநேரம், இந்த நாட்டின் எந்தவொரு பிரஜையும் தாம் விரும்பும் சமயத்தை பின்பற்றுவதற்கான சுதந்திரம் மிகச் சிறப்பாக பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதுவும் மக்களுக்கு தற்போது தெளிவாகியுள்ளது.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் காரணமாக வீழ்ச்சியடைந்திருந்த நாட்டின் பாதுகாப்பு பற்றிய நம்பிக்கை உறுதி செய்யப்பட்டு சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் ஒன்று மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று நான் உறுதியளித்தவாறு பொதுவான மக்கள் வாழ்க்கைக்குத் தடையாக உள்ள பாதாள உலகச் செயற்பாடுகள், போதைப்பொருள் பிரச்சினை போன்ற சமூக சீரழிவுகளில் இருந்து மக்களை மீட்பதற்காக முறையான வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு இருப்பது மக்களின் நம்பிக்கை மேம்படுத்துவதற்கு காரணமாகியுள்ளது.

நாட்டின் அரசியல் கலாசாரத்தில் தெளிவானதொரு மாற்றத்தை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதில் ஒரு கட்டமாக அரச நிறுவனங்களுக்கு தலைவர்களை நியமிப்பதற்காக அதுவரையில் இருந்துவந்த சம்பிரதாயங்களை மாற்றி நிபுணர் குழுவொன்றின் ஊடாக தகைமைகளை கண்டறிந்து நியமனங்களை மேற்கொள்ளும் முறையான பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று உற்பத்தி பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் விவசாயத்துறையில் புத்தெழுச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சுதேச வர்த்தகர்களையும் தொழிற்துறையாளர்களையும் பாதுகாப்பதற்கு இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சுதந்திரம் பெற்று 72 வருடங்களின் பின்னரும் மக்களின் பெரும்பாலான சாதாரணமான தேவைகளுக்கும் தீர்வுகள் கிடைக்கப்பெறவில்லை என்பதை நான் தேர்தல் காலத்தில் நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின் போது நேரில் கண்டுகொண்டேன்.

வேலைவாய்ப்பின்மை பிரச்சினையைத் தீர்ப்பதற்கு குறுகிய கால, நீண்டகால தீர்வுகள் வழங்கப்படுவதுடன், தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்தி, ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதும் அரசின் அடிப்படை இலக்காகும். விவசாயத்துறையை முழுமையாக சேதன பசளைப் பாவனைக்கு மாற்றுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

துரிதமானதும் வினைத்திறன் வாய்ந்ததுமான அரச சேவையை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்து அமைச்சுக்கள், நிறுவனங்களில் வீண்விரயத்தையும் ஊழலையும் முழுமையாக ஒழிக்க நடவடிக்கை எடுப்போம்.

வீண்விரயம், ஊழலுடன் சம்பந்தப்படுபவர்களுக்கு அவர்களது தராதரங்களை பொருட்படுத்தாது சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நான் பின்னிற்க மாட்டேன். ஏதேனும் ஒரு அமைச்சு அந்த இலக்குகளை அடைவதில் பின்னிற்குமாயின், அரசின் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான மாற்றங்களை செய்வதற்கும் நான் ஒருபோதும் பின்னிற்கப் போவதில்லை.

மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி மக்களிடம் சென்று அவர்களது உண்மையான பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றுக்கு தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். (எ22,44)

### கூட்டமைப்புக்குள்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டது. அந்தக் கட்சிக்கு தேசியப் பட்டியல் ஆசனம் ஒன்று கிடைக்கப் பெற்றிருந்தது. அதனை, தமிழ் அரசுக் கட்சியின் தலைமைக்குத் தெரியாமலும், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடன் பேச்சு நடத்தாமலும் தன்னிச்சையாக வழங்கப்பட்டது. இது தொடர்பில் தமது கண்டனத்தையும் எதிர்ப்பையும், புளொட் மற்றும் ரெலோ கட்சிகளின் தலைவர்கள் பதிவு செய்தனர்.

இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கீழ் செயற்படாமல் புளொட் மற்றும் ரெலோ கட்சிகள் தனித்து இயங்குவதற்குத் தீர்மானித்துள்ளன. கடந்த காலங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாகப் போட்டியிட்டு பின்னர் மஹிந்த அணியினர் தனித்து இயங்கியதைப் போன்று செயற்படுவதற்கு சபாநாயகரின் அனுமதியை, புளொட் மற்றும் ரெலோ கட்சியினர் கோரவுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 10 நாடாளுமன்ற ஆசனங்கள் கிடைக்கப் பெற்றன. அதில் 4 பேர் புளொட் மற்றும் ரெலோவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ,5)

### வீட்டில்...

பட்டுள்ளது. கஞ்சா பொதி கைப்பற்றப்பட்ட வீட்டிலிருந்த இளம் குடும்பப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, இரணைமடு விமானப் படையினர் வழங்கிய தகலுக்கு அமைய கிளிநொச்சிப் பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர்.

வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கஞ்சா பொதி மீட்கப்பட்டுள்ளது. வீட்டிலில் இருந்த பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார். இந்தக் கஞ்சா பொதி பெண்ணின் கணவனால் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும், கணவன் தப்பியோடியுள்ளார் என்றும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரைத் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்ற அனுமதி கோரப்பட்டுள்ளது என்றும், இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி புலனாய்வுப் பொறுப்பதிகாரி தகவலுக்கு அமைய முல்லைத்தீவு மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் வழிகாட்டலில், கிளிநொச்சி தலைமைப் பொலிஸ் நிலைய பதி கடமைப் பொறுப்பதிகாரி சம்பிக்க தலைமையிலான பொலிஸ் குழு இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது. (எ113)

### மணியின்...

தலைமைக்கு அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் இன்று அவர் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளார். (எ)

### மானிப்பாயில்...

தெரிவித்தனர்.

கடந்த சில மாதங்களாக மானிப்பாய் பகுதியில் உள்ள வங்கிகள், வணிக நிலையங்களுக்கு முன்பாக தரித்து விடப்படும் மோட்டார் சைக்கிள்களில் வைக்கப்பட்ட தலைக்கவசங்கள் காணாமல் போயிருந்தன. இது தொடர்பாகச் சிலர் முறைப்பாடுகள் செய்திருந்தனர். சுமார் 50க்கும் மேற்பட்ட தலைக்கவசங்கள் அந்தப் பகுதியில் மாயமாகியிருந்தன.

இந்தநிலையில் அந்தப் பகுதியில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர், தலைக்கவசத்தை எடுத்துச் சென்ற ஒருவரை மடக்கிப் பிடித்துள்ளார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தலைக்கவசங்கள் தொடர்ச்சியாக மாயமானமைக்கு அவரே காரணம் என்று தெரியவந்துள்ளது.

சுதுமலையைச் சேர்ந்த 37 வயதான இந்த நபர் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். திருடும் தலைக்கவசங்களை இந்த நபர் குறைந்த விலைக்கு விற்பனை செய்து வந்தமை தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

### இடைக்கால...

யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று நடைபெற்ற முதலாவது கட்சி தலைவர்கள் கூட்டத்திலேயே இரு நாள்கள் விவாதம் நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது. இடைக்கால கணக்கறிக்கை இன்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. (எ-44)

### இன்றுடன்...

கோளாறின் பின்னர் நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் தடைப்பட்டன. அதனால் நாடளாவிய ரீதியில் நாளாந்தம் இரண்டு மணித்தியாலங்களும் 45 நிமிடங்களும் மின்வெட்டை நடைமுறைப்படுத்த கடந்த செவ்வாய்க்கிழமை தீர்மானிக்கப்பட்டது. சனிக்கிழமைகளில் ஒரு மணித்தியாலம் மாத்திரம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இன்று வெள்ளிக்கிழமையின் பின்னர் நாளாந்தம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படாது என்று இலங்கை மின்சார சபையின் தலைவர் நேற்று அறிவித்துள்ளார். (எ)

### மயிலிட்டியில்...

சென்று விசாரணைகள் மேற்கொண்டனர். உரப்பை ஒன்றில் பொதி செய்யப்பட்ட நிலையில் கைக்குண்டுகள் காணப்பட்டன. இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளைப் பலாலிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ26,25,20)

### வீதியை...

கொடிகாமம் சந்தியில் நடந்துள்ளது.

நாகநாதன்வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ரவிச்சந்திரன் (வயது45) என்பவரே படுகாயமடைந்துள்ளார். அவர் சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தங்காலை சென்ற தனியார் பேருந்தே விபத்தை ஏற்படுத்தியுள்ளது. பேருந்தின் சாரதி கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பேருந்தும் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டுள்ளது. பயணிகள் பிறிதொரு பேருந்தில் பயணிப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ159)

### 16 பேருக்கு...

யில் இருந்து நாடு திரும்பிய 16 பேருக்கு கொரோனா தொற்றுள்ளமை நேற்று வியாழக்கிழமை உறுதிப்படுத்தப்பட்டது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்தது.

2 ஆயிரத்து 765 பேர் சிகிச்சைகளின் பின்னர் வீடுகள் திரும்பியுள்ள நிலையில், கொரோனாத் தொற்றுக்குள்ளான 142 பேர் தற்போது நாடு முழுவதும் உள்ள 9 மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ)

# ச.ச.நிலையங்களுடன் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஓக. 21
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள சனசமூக நிலையங்களுடனான கலந்துரையாடல் ஒன்று சபையின் தவிசாளரின் தலைமையில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், சபை உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் நேற்று நடைபெற்றது.
இதன்போது சனசமூக நிலையங்களின் நிர்வாகத்தைப் புதுப்பித்தல், 2021ஆம் ஆண்டுக்கான பாதீட்டு முன்மொழிவுகள்பற்றிய விடயங்கள், சபைநிதி மற்றும் ஏனைய நிதிகள் மூலம் இவ் வருடம் நிறைவேற்றப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், நிறைவேற்றப்படவுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பற்றிய விடயங்கள், சனசமூக நிலையங்களுக்கான மானிய நன்கொடை வழங்குதல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. விசேடமாக கிராமங்கள் தோறும் இறப்பு சகாயக் குழுக்களை சனசமூக நிலையங்கள் ஊடாக உருவாக்கி அதன் மூலம் வாழ்வாதார ரீதியில் பின்தங்கி வறுமையுள்ள மக்களின் மரணச்சடங்கு நிகழ்வுகளுக்கு உதவி புரிவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வது பற்றி ஆராயப்பட்டது. அக்குழுக்களினை வளர்த்தெடுப்பதற்கு சபை எவ்வாறு ஒத்துழைப்பு வழங்குவது என்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது. (ப-222)

# பிறவுண் வீதியைச் சீரமைத்து காப்பெற்றாக மாற்றுங்கள்

## மக்கள் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஓக. 21**
**யாழ்ப்பாண நகரை அண்டிய பிறவுண் வீதி நீண்ட காலமாகச் சீரமைக்கப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுவதால், அந்த வீதியை காப்பெற் வீதியாகச் சீரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

பிறவுண் வீதி நீண்ட காலமாகச் சீரமைக்கப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுவதால், மழை காலங்களில் அதிகம் அந்த வீதியைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.
வீதியில் ஏற்பட்ட குழிகளில் வெள்ளம் தேங்குவதால் வீதியால் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறித்த வீதியைச் சீரமைப்பதற்கு தற்போது கட்டட இடிபாடுகள் பறிக்கப்பட்டு வருகின்றன.
வீதியில் ஏற்பட்ட சேதங்கள், குழிகளை கட்டட இடிபாடுகளைக் கொண்டு நிரப்பி சீரமைக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இக் கட்டட இடிபாடுகளைக் கொண்டு அந்த வீதியைச் சீரமைப்பதற்கு பிரதேச மக்கள் கடும் விசனம் தெரிவித்து வருகின்றனர். மக்கள் அதிகமாக போக்குவரத்துச் செய்யும் இவ் வீதியை உரிய முறையில் காப்பெற் வீதியாகச் சீரமைத்துத் தருமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-17)

# பொதுக்கூட்டம்

வவுனியா பூந்தோட்டம் லக்ஸ்மி சமேத நரசிங்கர் ஆலய வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.
இதன்போது ஆலயத்துக்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. தலைவராக கோ. ஸ்ரீஸ்கந்தராஜாவும், உபதலைவராக ம.நீலா கரன், செயலாளராக சோ.றஜீதரன், உப செயலாளராக, ந.கருணாநிதி, பொருளாளராக கு.கிருஸ்ண குமார் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். நிர்வாகசபை உறுப்பினர்களாக ம. சதீசன், இ.பாஸ்கரன், க.சிவலிங்கம், க. தேவராசா, செ. கிருபாகரன், இ. சிவச்செல்வன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ஐ-110)

# பாடசாலை மாணவருக்கு போசனைப் பொருள்கள்

திருகோணமலை, ஓக. 21
கிழக்கு மாகாணத்தில் 320 பாடசாலைகளுக்கு போசனைப் பொதிகள் வழங்கப்படவுள்ளன. என்று கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எம். சி. எம். ஷரீப் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
மத்திய கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிழக்கு மாகாணத்தில் முதல் கட்டமாக 320 பாடசாலைகளைச் சேர்ந்த 24ஆயிரத்து 660 மாணவர்களுக்கு இப் பொதிகள் வழங்கப்படஉள்ளன. இதனடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் 102 பாடசாலைகளைச் சேர்ந்த 7ஆயிரத்து 773 மாணவர்களுக்கும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 92 பாடசாலைகளைச் சேர்ந்த 6 ஆயிரத்து 981 மாணவர்களுக்கும், அம்பாறை மாவட்டத்தில் 73 பாடசாலைகளைச் சேர்ந்த 5 ஆயிரத்து 427 மாணவர்களுக்கும், கல்முனை கல்வி வலயத்தில் 55 பாடசாலைகளைச் சேர்ந்த 4ஆயிரத்து 479 மாணவர்களுக்கும் முதல் கட்டமாக இப் போசனைப் பொருள்கள் வழங்கப்பட உள்ளன.
இப்பொதியில் 200 கிராம் சமபோஷா 6 பக்கெட்டுகளும், 350 கிராம் நூடில்ஸ் பக்கெட் ஒன்றும், 75 கிராம் பிஸ்கட் பக்கெட் மூன்றும், 1 கிலோ கடலை, மற்றும் 10 முட்டைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப் பொதிகள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக அதிபர்களுக்கு வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றார். (ப)

# ஆள்மாறாட்டம் செய்த நபருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, ஓக. 21
எருவுக்குள் முதிரை மரக்குற்றிகள் ஏற்றி வந்த சாரதிக்குப் பதிலாக ஆள்மாறாட்டம் செய்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் உத்தரவிடப்பட்டது.
கடந்த வாரம் கனகம்புளியடிச் சந்தியில் வீதிப் போக்குவரத்து கண்காணிப்பு பணியில் ஈடுபட்ட பொலிஸார் அவ்வழியாக வந்த லொறியை நிறுத்துமாறு சமிக்ஞை காட்டியபோது சற்றுத் தூரத்தில் லொறியை நிறுத்திய சாரதி அங்கிருந்து தப்பியோடியுள்ளார். பொலிஸார் லொறியை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று சோதனையிட்ட போது ஏற்றிவரப்பட்ட எருவுக்குள் பெருமளவு முதிரை மரக்குற்றிகள் காணப்பட்டன.
இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட வேளையில் லொறியின் சாரதி நேற்றுமுன்தினம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். இவரிடம் பொலிஸார் துருவித் துருவி விசாரணைகளை மேற்கொண்டதில் லொறியின் சாரதி இவரில்லை என அறிந்த பொலிஸார் ஆள்மாறாட்டம் செய்த நபரை நீதிமன்றில் முற்படுத்தினர்.
லொறியைச் செலுத்தி வந்த நபரைக் கைதுசெய்ய பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதிவான், ஆள்மாறாட்டம் செய்த நபரை செப்ரம்பர் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ 9)

# வீதி விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஓக. 21
பேருந்துக்காக வீதியோரத்தில் நின்ற யுவதியை வேகக் கட்டுப்பாட்டை இழந்து வந்த மோட்டார் சைக்கிள் மோதியது.
இதன்போது இருவர் காயமடைந்தனர்.
இந்த விபத்து நேற்றுமுன்தினம் மட்டுவில் பகுதியில் இடம்பெற்றது.
காயமடைந்த மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த 23 வயது யுவதியும், சித்தன் கேணியைச் சேர்ந்த 19 வயது இளைஞனும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ-9)

# இலவச மருத்துவ முகாம்

இலவச மருத்துவ முகாம் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் கறீன் பில்ட் சனசமூக நிலையத்தில் காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை நடைபெறவுள்ளது.
இதன்போது நீரிழிவு பரிசோதனை, குருதி அழுத்தம், கண் பரிசோதனை என்பன நடைபெறவுள்ளன. இதன்போது வாசிப்புக் கண்ணாடி இலவசமாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

**வேலையாள்கள் தேவை**
கிளிநொச்சி முறுகண்டியில் இயங்கும் பிரபல தனியார் உணவகத்திற்கு
(P.P.T Express)
- கணக்காளர்,
- காசாளர்,
- சிட்டை எழுதுனர்,
- உதவியாள்கள்.

077 3866250

# சதுர்த்தி விரதத்தில் தீர்த்தவாரி உற்சவம்

இருபாலை, ஓக. 21
இருபாலை தென்கோவை திருவருள்மிகு கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி விரதத்தை முன்னிட்டு விஷேட தீர்த்தவாரி உற்சவம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.
ஆலயத்தில் அமைந்துள்ள சதுர்த்திப் பிள்ளையாருக்கு காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரையும் பக்தர்கள் ஆலய தீர்த்த புஷ்கரணியில் இருந்து தீர்த்தம் எடுத்து வந்து தங்களுடைய கைகளால் தீர்த்தவாரி (நீர் ஊற்றுதல்) செய்ய முடியும்.
மாலை 4 மணி முதல் கற்பகப் பிள்ளையாருக்கு சிறப்பு அபிஷேகமும், பூசை வழிபாடுகளும் நடைபெற்று விநாயகப் பெருமான் வீதியுலா வரும் காட்சி நடைபெறும்.
தீர்த்தவாரி வழிபாட்டை மேற்கொள்ள விரும்பும் பக்தர்கள் தேங்காய், குடம் என்பனவற்றைக் கொண்டு வருமாறு ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

**வேலைவாய்ப்பு**

யாழில் இயங்கிவரும் அச்சகத்திற்கு தகுதியானவர்களிடம் இருந்து கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
1). வரவேற்பாளர்கள்
2). Binding (முன் அனுபவம் தேவை)
3). வடிவமைப்பாளர் (Graphic Designer)
தகுதியானவர்கள் 24.08.2020 (திங்கட்கிழமை) முற்பகல் 10.00-12.00pm மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமூகம்தரவும்.
**உதயன் பணிமனை**
இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.